

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 236 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை (19.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 28, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50





பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரை பதவி நீக்க பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையை நிறைவேற்ற ரணிலுக்கு ஆதரவளிப்பதில் பொதுஜன பெரமுன எம்.பிக்கள் பின்வாங்கியுள்ளதாகத் தகவல்.

இதனால் அதற்குத் தேவையான 113 வாக்குகளைப் பெறத் தடுமாறுகிறதாம் அரசு. ஏற்கனவே எதிர்க்கட்சி எம்.பிக்கள் இதற்கு ஆதரவளிக்கும் நிலையில் இல்லை.

ஆணைக்குழுவின் தலைவர் எப்போதும் மக்கள் பக்கம் பேசுவதால் அவரைப் பதவி யிலிருந்து நீக்க ஆதரவளித்துவிட்டு ஊர்களுக்கு செல்வது எப்படியென கேட்கின்றனராம் ஆளுங்கட்சி எம்.பிக்கள்.

# நினைவேந்தலுக்கு கொழும்பில் இடையூறு!



## திடீரென புகுந்த குழுவினரால் பதற்றம்

நா.தினுஷா

தமிழினப் படுகொலையின் 14 வருடகால நிறைவை முன்னிட்டு, பொரளை பொதுமயான சுற்றுவட்டத்தில் சிவில் அமைப்புகளினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (18) ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதனை இனவாத அமைப்புகள் சில குழப்புவதற்கு முயற்சித்ததால் பதற்றம் ஏற்பட்டது.

'புலிகளை நினைவுகூர வேண்டாம்' என்று பதாகைகளை ஏந்தியவாறு... 02 பக்கம்

# உறவுகளின் கண்ணீருடன் உணர்வுபூர்வ அஞ்சலி!

## சோகமயமானது தமிழர் தாயகம்



முல்லைத்தீவு செய்தியாளர்

தமிழினப் படுகொலையின் 14ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யுத்தத்தில் உறவினர்களை இழந்த நூற்றுக்கணக்கானோரின் உணர்வுபூர்வ அஞ்சலி தமிழர் தாயகத்தில் நேற்று (18) இடம்பெற்றதுடன் பிரதான நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வுகள்... 02 பக்கம்



# உள்நாட்டில் நீதிக்கு சாத்தியம் கிடையாது

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றமே தீர்வென்கிறார் அருட்தந்தை சக்திவேல்

நா. தினுஷா

இனப்படுகொலை அல்லது இன அழிப்புக்கான நீதியையோ அரசியல் உரிமையையோ அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது. எனவே, சர்வதேச சமூகத்தின் அழுத்தம் எமக்கு மேலும் அவசியம். 02 பக்கம்

# மே 23 முதல் 26 வரை கூடுகிறது பாராளுமன்றம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற அமர்வை அடுத்த வாரம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதிவரை பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 25 மற்றும் 26ஆம் திகதிகள் தவிர பாராளுமன்றம் கூடும். ஏனைய நாட்களில்... 02 பக்கம்



படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க

# உடலுக்கு தீங்கிழைக்கும் புகையிலை இறக்குமதி

## ரூ.16 கோடி பெறுமதியான பொதிகள் சுங்கத்தில் மீட்பு

ம. சுசிகலா

டுபாயிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 16.4 கோடி ரூபா பெறுமதியான உடலுக்குத் தீங்கிழைக்கும் ஹூக்கா புகையிலைப் பொதிகளை சுங்கத் திணைக்களத்தின் ஒருகொடவத்தை களஞ்சியசாலையிலிருந்து அதிகாரிகள் நேற்று (18) மீட்டுள்ளனர். 02 பக்கம்

# மின்சாரம், எரிபொருள், சுகாதாரத்துறை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

மின்சாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகள், பெற்றோலியப் பொருட்கள், எரிபொருள் விநியோகம் மற்றும் சுகாதாரத்துறை ஆகியன மீண்டும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் நேற்று முன்தினம் (17) வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இதுதொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள், எரிபொருள் வழங்கல், விநியோகம், வைத்தியசாலைகள், 02 பக்கம்




# கடவுச்சீட்டு வழங்கும் முறையில் மாற்றம்

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் கடவுச்சீட்டு வழங்கும் நடைமுறையில் மாற்றம் செய்யப்படுமென குடிவரவு - குடியகல்வு திணைக்களக் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார். தற்போது கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கு கடும் நெரிசல் ஏற்பட்டுள்ளதாக குடிவரவு - குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

முள்ளிவாய்க்கால் நினைவுக் கூட்டம் போன வருஷம் கொழும்பில நடந்தது... அப்ப யாரும் குழப்பம் விளைவிக்கேல்ல... அப்போ பசி பட்டினியா இருந்த காலம் தானே... சத்தமா கத்தவும் முடியாமல் இருந்திருக்கும் என்னங்கோ..!



## ஜனாதிபதி ரணில் தலைமையில்

# இராணுவ வெற்றிவிழா கொண்டாட்டம் இன்று

நாட்டில் இடம்பெற்ற 30 வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டின் ஐக்கியம் மற்றும் சுயாதீனத்தன்மையை பாதுகாப்பதற்காக உயிர்த்தியாகம் செய்த முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் என்பவற்றைச் சேர்ந்த 28 ஆயிரத்து 619 இராணுவ வீரர்களை நினைவுகூரப்படுவதுடன் 14ஆவது தேசிய இராணுவ வெற்றிவிழா இன்று (19) கொண்டாடப்படுகிறது.

இந்நிகழ்வு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய படைவீரர் நினைவிடத்தில், பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத் தலைமையகத்தின் ஒருங்கிணைப்பில் போர்வீரர் சேவை அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்நிகழ்வு இன்று மாலை 04.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. 02 பக்கம்

# கர்நாடகா முதல்வராகிறார் சித்தராமையா நாளை பதவியேற்பு



12 பக்கம்

# தரமற்ற டீசல் இறக்குமதி

## தனியார் பஸ் உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

நா. தினுஷா

நாட்டுக்கு தற்போது தரம் குறைந்த டீசல் இறக்குமதி செய்யப்படுவதாலேயே பஸ்களிலிருந்து அதிக புகை வெளியேற்றப் படுகிறது. அவ்வாறிருக்கையில், தனியார் பஸ்களை நிறுத்தி புகைப் பரிசோதனைக்குட்படுத்துவது அநீதியான செயற்பாடாகும். எனவே, தரம் வாய்ந்த டீசலை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுதொடர்பில் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தரப்பினருடன் அடுத்தவாரம்... 02 பக்கம்

# அஷ்ரபை முஸ்லிம் பிரபாகரனாக காட்ட முயற்சித்த கடும் போக்காளர்கள்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹசன் அலி தெரிவிப்பு

(காரைதீவு செய்தியாளர்)



இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பெரும்பங்காற்றிய பெருந்தலைவர் அஷ்ரபை முஸ்லிம் பிரபாகரனாகப் பெரும்பான்மைச் சமூகத்தில் உள்ள கடுமைப் போக்காளர்கள் காட்சிப்படுத்த பெரிதும் பாடுபட்டனர் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் சுகாதாரத்துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

இவரின் நிந்தவூர் இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்து ஜனாதிபதிக்கும் தமிழ்த் தரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை குறித்துப் பேசியபோது இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்த் தரப்புடனான பேச்சுவார்த்தையில் எவ்வகையிலான இணக்கப்பாடு எட்டப்பட்டாலும் அது பாராளுமன்றப் பலத்துடன்தான் முற்றுப்பெற வேண்டியுள்ளது என்பது யதார்த்தம். ஆனால் தற்போதைய பாராளுமன்றத்தின் பலம் மொட்டுக் கட்சியிடம்தான் உள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் தலைவர் அஷ்ரப் பெரும்பங்காற்றினார். ஆனால் அவரை முஸ்லிம் பிரபாகரனாகப் பெரும்பான்மை சமூகத்திலுள்ள கடும் போக்காளர்கள் காட்சிப்படுத்தப் பெரிதும் பாடுபட்டனர். அதேவேளை அவரை ஒரு பிரிவினைவாதி என்றும் தமிழ்ப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க வந்த கோடரிக் காம்பு என்றும் ஒரு சில போராட்டக் குழுக்கள் அவருக்கு நெருக்குதல்கள் கொடுத்தன.

அவர் இரு முறை உயிர்த் தப்பிய வரலாறு மறக்க முடியாதது. அவ்வாறான காலத்தில்தான் அவரது உலங்கு விபத்தும் இடம்பெற்றது. அந்த விபத்தைப் பற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும்கூட காணாமல் போன ஒரு புரளியும் பின்னர் தானாக அடங்கியதா அல்லது அடக்கப்பட்டதா? என்பது இன்றுவரை விடை காண முடியாததொன்றாகும்.

அவரால் தென்கிழக்கு மக்களின் தாருஸ்ஸலாமாக நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் வீடும் நிந்தவூரில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 23 வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் கிடக்கும் அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபமும்கூட ஆணைக்குழு அறிக்கை போல மர்மமான தூர்ந்த விடயங்களாகி விட்ட நிலையில், அவரால் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட யோசனைகளும் முளையிலேயே கருகி விட்டன.

கடந்த 23 வருடங்களாக எந்தவொரு முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களும் அவரால் முன்வைக்கப்பட்ட கரையோர மாவட்டம் மற்றும் தென்கிழக்கு அலகு பற்றி பேச்சுவார்த்தை மேசைகளில் முன்வைத்ததே கிடையாது. பாராளுமன்றத்தில்கூட பேசியதும் இல்லை. எனவேதான் அவரால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட வேண்டிய காலகட்டம் நெருங்கி உள்ளது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் கட்சிகளுடன் ஜனாதிபதி பேசுவார் என்று தெரிகின்றது.

எம்மைப் பொறுத்தவரை சம்பந்தன் ஐயாவின் காலத்துக்குள் தீர்வு எட்டப்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். அவர் முஸ்லிம்களுக்கு கிடைக்க வேண்டிய தீர்வு விடயத்தில் மிகுந்த பற்றுறுதியுடன் உள்ளார். தலைவர் அஷ்ரப், சம்பந்தன் ஐயா போன்றோர் ஏற்கனவே தீர்வு முயற்சிகள் தொடர்பில் ஆக்கபூர்வமாக பேச்சுகளைப் பேசி யோசனைகளைப் பரிமாறியுள்ளனர்.

# க.பொ.த. சாதாரண, உயர்தர பரீட்சைகள் ஒரே வருடத்தில் நடத்தப்படும்

## கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவிப்பு



கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை அடுத்தவருடம் ஒரே வருடத்தில் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் முடிந்தளவு விடுமுறை தினங்களை குறைத்துவிட்டு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இரு மாதங்கள் காலதாமதமாகியுள்ள நிலையில், தொடர்ந்தும் அதனை காலந்தாழ்த்த விரும்பவில்லை. தொடர்ந்தும் அந்த செயற்பாடுகளை காலந்தாழ்த்தாமல், விடைத்தாள் மதிப்பீட்டு மத்திய நிலையங்களை அதிகரித்து அந்த செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம். 2024ஆம் ஆண்டாகும்போது சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை வழமைபோல் முன்னெடுக்க முடியும்.

கொரோனா நிலைமையின் காரணமாகவே ஏப்ரல் மாதம் இடம்பெறவிருந்த பரீட்சையை சில வாரங்களுக்கு ஒத்திவைக்க நேர்ந்தது. இருந்தபோதும் அடுத்த வருடம் பெப்ரவரி அல்லது மார்ச் மாதமாகும்போது நிலைமை வழமைக்கு திரும்பும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். பரீட்சை மாத்திரமல்ல பாடப்பரப்பையும் உரிய நேரத்தில் நிறைவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

அதனால், பாடசாலை நேர அட்டவணையும் பரீட்சை அட்டவணையும் ஒரே மாதிரியாக முன்னெடுக்கப்படுகின்றன. முடிந்தளவு விடுமுறை காலத்தை குறைத்து கற்றலுக்கான நேரத்தை அதிகரிப்பதே எமது நோக்கமாகும் என்றார்.

# நினைவேந்தலுக்கு திருமலையில் தடை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை சிவன் கோயிலுக்கு அருகில் நேற்றைய தினம் (18) முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படவிருந்த நிலையில் திருகோணமலை நீதிமன்றம் நிகழ்வை நடத்த வேண்டாம் என தடை உத்தரவு பிறப்பித்தது.

திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் கே பியரன்ன தொடுத்த வழக்கின் கோரிக்கையை பரிசீலித்த திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார்.

# பாதுக்கவில் 45 சிறாருக்கு போஷாக்கு குறைபாடு

பாதுக்க சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் மந்தபோசணை கொண்ட 45 வரையிலான சிறுவர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளங் காணப்பட்டுள்ள சிறுவர்களுக்கு ஒருவருட காலப்பகுதிக்கு குறைந்தது போசணை நிறைந்த உணவுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு பெற்றுக்கொடுத்தால் மாத்திரமே சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அதேபோன்று, இதுவரையில் பாதுக்கை சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்துக்குட்பட்ட பகுதிகளில் குழந்தை பிறப்பு வீதம் படிப்படியாக குறைவடைந்து வருகிறது. 2014ஆம் ஆண்டில் நூற்றுக்கு 14.5 சதவீதமாக இருந்த குழந்தை பிறப்பு தற்போது நூற்றுக்கு 9 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

மேலும், 700 வரையிலான பெண்கள் திருமணமாகியும் குழந்தைகள் இல்லாத நிலையில் இருக்கின்றனர். குழந்தை பெறுவதற்கு இருக்கும் தாய்மார்களின் எண்ணிக்கையும் இந்த தொகையை அண்மித்து காணப்படுவதுடன், குழந்தை பெற்றெடுப்பதற்கான வாய்ப்பு இருந்தும் குழந்தை இல்லாதவர்களின் எண்ணிக்கை 50 சதவீதமாக உள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பாதுக்கை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு 140 வர்க்க கிலோமீற்றர் பரப்பளவை கொண்டுள்ளதுடன் இங்கு 25 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரம் பேர் வசிப்பதாக தெரிவித்தார்.

## மே 23 முதல் 26 வரை...

மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரத்தை ஒதுக்க முடிவுசெய்யப்பட்டது.

பாராளுமன்றம் மே 23ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கு கூடவிருப்பதுடன், மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணிவரை பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 2312/67ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 2312/68 67ஆம் இலக்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2312/70 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அது மாத்திரமன்றி, புகையிலை வரி (திருத்தச்) சட்டத்தின் கீழ் 2312/71ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், முத்திரை தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 2312/73ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் 2316/32ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி, 2003 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 2309/37ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை என்பனவும் அன்றையதினம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், பி.ப 5.00 மணி முதல் 5.30 மணி வரை ஆளுந்தரப்பினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

மே 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணிவரை 2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 7ஆம் பிரிவின்படி தற்போதைய தலைவர் மற்றும் உறுப்பினர் ஜே.டபிள்யூ.எம்.ஜே.பி.கே. ரட்நாயக்கவை அந்த உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கான உரை நிறைவேற்றப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு வேளையின் போதான வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

மே 22ஆம் திகதியிலிருந்து ஓய்வுபெறவுள்ள பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவின் சேவையைப் பாராட்டி பாராட்டுப் பிரேரணைக்காக மே 25ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரையான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பி.ப 12.30 மணிமுதல் பி.ப 5.00 மணிவரை 2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான 2309/37ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 2312/80 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், 2018 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 2312/69ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, 2018ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 2312/69ஆம் இலக்க மற்றும் 2318/53 ஆம் இலக்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் என்பன அங்கீகரிக்கப்படவுள்ளன.

அத்துடன், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் செக் குடியரசு அரசாங்கத்துக்கும் இடையில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமான 2023 பெப்ரவரி 03 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமும் அன்றையதினம் அங்கீகரிக்கப்படவுள்ளது.

அதன்பின், மாலை 5.00 மணி முதல் 5.30 மணிவரை, எதிர்க்கட்சிகள் கொண்டு வரும் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மறைந்த முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு இரங்கல் தெரிவிக்கும் பிரேரணைக்கு மே மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை நாள் முழுவதையும் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அன்றைய தினம் காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை அனுதாபப் பிரேரணை எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## தரமற்ற டீசல்...

பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம். அதன் பின்னர் தீர்வு கிடைக்காவிட்டால் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க நேரிடும் என்று இலங்கை தனியார் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று (18) கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய நாட்களில் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தினால், பஸ்கள் தொடர்ச்சியாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. சங்கமென்ற அடிப்படையில் பஸ்களிலுள்ள பாகங்களை நீக்குதல், தேவையில்லாதவற்றை நீக்குதல், ஒலி, அதிக ஒலி, ஸ்டிக்கர் ஒட்டுதல் போன்ற செயற்பாடுகளை நாங்கள் எதிர்க்கப் போவதில்லை.

இருந்தபோதும், பஸ்களை இடையில் நிறுத்தி புகை பரிசோதனை செய்வதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரிகளும் பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கிறார்கள். பஸ் ஒன்றுக்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளும்போது வருமான அனுமதிப் பத்திரத்துடன் புகை பரிசோதனை அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட சகல ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

அந்த அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொண்டதன் பின்னரே போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தையும் வருமான அனுமதிப் பத்திரத்தையும் பெற்றுக்கொள்கிறோம். இருந்தபோதும், இவர்கள் தொடர்ச்சியான வாகனங்களை நிறுத்தி அதிக புகை வெளியிடப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கிறார்கள்.

இது தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரிடமும் கலந்துரையாடியுள்ளேன். இதுபோன்ற அநீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டாம் என்று போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கும் அறிவித்துள்ளோம்.

தற்போது, நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் டீசலில் சல்பரின் கொள்ளளவு 500 வரையிலேயே காணப்படுகிறது. அதன் காரணமாகவே பஸ்களிலிருந்து அதிக புகை வெளியேறுகிறது. எனவே, சிறந்த தரம் வாய்ந்த டீசலை நாட்டுக்கு இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பஸ்களில் எந்த பரிசோதனையும் முன்னெடுக்கப்படுவதில்லை. எங்களுடனேயே போக்குவரத்து சபை பஸ்களும் பயணிக்கின்றன. அவ்வாறு இருக்கையில் மனித உரிமை மீறப்படுகின்றதா என்று தெரியவில்லை.

தொடர்ந்தும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுமாக இருந்தால் தினமொன்றை குறிப்பிட்டு பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்போம். இதுதொடர்பில் மீண்டும் அடுத்தவாரம் அமைச்சின் செயலாளருக்கு கலந்துரையாடவுள்ளோம். பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடனும் பேச்சுவார்த்தை முன்னெடுத்து வருகிறோம். கலந்துரையாடல்களின் பின்னர் தீர்வு கிடைக்காவிட்டால் விருப்பம் இல்லாவிட்டாலும் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க நேரிடும் என்றார்.

## ஜனாதிபதி...

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்குகொள்ளவுள்ளதுடன், பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகள், சபாநாயகர்கள், எதிர்க்கட்சி தலைவர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பில்ட் மார்சல் சரத் பொன்சேகா, முன்னாள் முப்படைத் தளபதிகள், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க, ஜனாதிபதி செயலாளர், பிரதமரின் செயலாளர், பாதுகாப்பு செயலாளர் நாயகம் கமல் குணரத்ன (ஓய்வு), பாதுகாப்புச் சபை பிரதானி, முப்படை தளபதிகள், பொலிஸ் மா அதிபர், முப்படை அதிகாரிகள் உள்ளிட்ட சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட யுத்த காலத்தில் உயிரிழிந்த இராணுவ வீரர்களின் உறவினர்கள், ஓய்வுப்பெற்ற இராணுவ வீரர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## நினைவேந்தலுக்கு...

நினைவேந்தல் நிகழ்விடத்துக்கு வந்த குழுவினர் அங்கு கோஷம் எழுப்பியவாறு இடையூறு விளைவித்தனர். இதன் காரணமாக அப்பகுதியில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் கலகம் அடக்கும் பொலிஸாரும் அழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல், சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல், சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம், மனித உரிமை ஆர்வலர் சந்தியா எக்னலிகொட மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள் எனப் பலர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமாகி சற்றுநேரத்தில் அந்தப் பகுதிக்கு வந்த சிலர், நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். வாக்குவாதம் மேலும் வலுவடைய ஆரம்பித்ததால் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் அவ்விடத்துக்கு வந்திருந்தனர்.

இந்த வாக்குவாதத்தின் மத்தியில் சிங்ஹல ராவய என்று குறிப்பிடப்பட்டு "புலிகளை நினைவுகூர வேண்டாம்" "பயங்கரவாதத்தை தோற்கடிப்போம் சமாதானத்தைப் பாதுகாப்போம்" என்கிற பதாதையை ஏந்தி கோஷம் எழுப்பிக்கொண்டு அவ்விடத்துக்கு வந்த சிலரால் இரு குழுவினருக்கும் இடையிலான வாய்த்தர்க்கம் மேலும் வலுவானது. அதனைத் தொடர்ந்து கலகம் அடக்கும் பொலிஸாரும் அவ்விடத்தில் குவிக்கப்பட்டனர்.

அவ்விடத்தில் நினைவேந்தலுக்காக ஏற்றப்பட்டிருந்த ஈகைச்சுடரை அங்கிருந்து நீக்க அவர்கள் முயற்சித்திருந்தனர். ஆனால், நினைவேந்தல் ஏற்பாட்டாளர்கள் அதற்கு இடமளிக்கவில்லை. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மத்தியிலும் நினைவேந்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்களின் எதிர்ப்பு அதிகரிக்கவும் பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர். ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் வீதியின் மத்தியில் இருந்து இராணுவ வீரரை நினைவுகூருவோம் என்றும், நாட்டை வீணடித்த விடுதலைப் புலிகளை நினைவுகூர இடமளிக்க முடியாது என்றும் கோஷம் எழுப்பினர்.

நிலைமை தீவிரமடைந்ததால், நினைவேந்தல் செய்த தரப்பினரை அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றுவதற்கு பாதுகாப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுத்தனர்.

## உடலுக்கு...

ஷிஷா இயந்திரங்களுக்கு பயன்படுத்தப்படும் நிக்கட்டின் அடங்கிய புகையிலையே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் 50 கிராம் அடங்கிய ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 200 பைக்கற்றுகளில் அடைக்கப்பட்டிருந்தன. அவை எண்ணாயிரத்து 10 கிலோகிராம் எடையுடையவையென அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுங்கத் திணைக்களத்தின் துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல் அடிப்படையிலேயே இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், டுபாய் நாட்டிலிருந்து புகையிலை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தப் புகையிலையில் 0.05 வீதமான நிக்கட்டின் அடங்கியுள்ளதால் இவை உடலுக்கு கேடு விளைவிக்கக் கூடியவையென சுங்கத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவை இலங்கையிலுள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றின் பொய்யான பெயரைப் பயன்படுத்தி டுபாயில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. குறித்த போதைப்பொருளை இறக்குமதி செய்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் யூ.கே.அசோக ரஞ்சித் தெரிவித்தார்.

## உள்நாட்டில்...

இனப் படுகொலைக்கு நீதி தேவையென்றால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு செல்லவேண்டும் என்பதே எமது கோரிக்கை என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை குழப்புவதற்கு சிலர் முயற்சித்தமை குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் 14 ஆண்டு நினைவேந்தலை கொழும்பில் முன்னெடுக்க சிவில் சமூகங்கள் என்ற அடிப்படையில் ஏற்பாடு செய்திருந்தோம். அந்த தீர்மானத்துக்கமையவே இந்த நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுத்திருந்தோம். நினைவேந்தல் செயற்பாடுகளுக்காக அங்கு செல்லும்போதே பாதுகாப்புப் பிரிவினர் அங்கு குவிக்கப்பட்டிருந்தார்கள். எனவே, அவ்விடத்தில் ஏதோ இடம்பெறப்போகிறது என்பதை நாங்கள் தெளிவாக அறிந்திருந்தோம்.

நினைவேந்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்கும்போதே அங்கு சந்தேகத்துக்கிடமான சிலர் இருந்தார்கள். அதன்பின்னர் இன்னும் சிலர் அவர்களுடன் சேர்ந்த பின்னரே அங்க குழப்பநிலை உருவானது. மேலும் அவர்கள் எங்களை தாக்கும்நோக்கிலேயே இருந்தார்கள். பொலிஸார் எங்களை அங்கிருந்து வெளியேற்றினார்களே தவிர ஆர்ப்பாட்டம் செய்தவர்களை தடுக்கவில்லை.

முள்ளிவாய்க்காலின் 14ஆவது ஆண்டு நினைவேந்தலை கூட கொழும்பில் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது என்றால், இவர்களிடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு இடமளிக்குமாறு அறிவித்திருந்தாலும் அதற்கான வாய்ப்பு வழங்கவில்லை என்றால் ஒருபோதும் நீதியை எதிர்பார்க்க முடியாது என்றார்.

## கடவுச்சீட்டு...

முன்னதாக, முன்பதிவு முறையில் கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டன. அதன்படி, முன்பதிவு செய்தவர்கள் அந்த நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் வந்து சேவைகளைப் பெற வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஆனால், சில தரகர்கள் சட்டவிரோதமான முறையில் மக்களுக்கு சேவைகளை வழங்க முற்பட்டதால் முன்பதிவு செய்யும் பணியை நிறுத்த நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மக்களை ஏமாற்றி பணம் பறித்த பெரும் எண்ணிக்கையிலான தரகர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்த நிலை காரணமாக பத்தரமுல்ல குடிவரவு குடியகல்வு திணைக்கள வளாகத்தில் சில நாட்களாக கடும் மக்கள் கூட்டம் திரண்டுள்ளது. இதனால் மீண்டும் பழைய முறைமை அடுத்தமாதம் முதல் அமுலுக்கு வருகிறது.

இதேவேளை, வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கான விண்ணப்பத்தை ஒன்லைனில் பெற்று மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டை வீடுகளுக்கே அனுப்பி வைக்கும் புதிய முறை ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படும் என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய நேற்று (18) தெரிவித்தார்.

இதற்காக 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய 50 பிரதேச செயலக அலுவலகங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் கைரேகை பெறும் இயந்திரங்களை பொருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பதாரர் அந்த பிரதேச செயலக அலுவலகத்துக்குச் சென்று கைரேகைகளை பதிவு செய்து ஒன்லைனில் அல்லது இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் பணத்தை செலுத்திய பின்னர் வீட்டுக்கு செல்ல முடியும் எனவும் இலுக்பிட்டிய தெரிவித்தார்.

இதன் பின்னர் மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டை வீட்டுக்கே அனுப்பி வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மின்சாரம்,...

தாதியர் பாடசாலைகள், மருந்தகங்கள், நோயாளர்களின் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, போசாக்கூட்டல் மற்றும் சிகிச்சை அளித்தல், அதனுடன் தொடர்புடைய சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி முன்னதாக, 2022 ஓகஸ்ட் 3, 2022 செப்டெம்பர் 3, 2022 ஒக்டோபர் 4, 2023 ஜனவரி 3, 2023 பெப்ரவரி 17ஆகிய திகதிகளில் இந்த சேவைகள் அத்தியாவசியமானவை என்று அறிவித்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உறவுகளின்...

நேற்றுக்காலை 10.30மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு ஆரம்பமாயின.

அதனைத் தொடர்ந்து யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் தனது குடும்பத்தில் 13 பேரை இழந்த மன்னாரைச் சேர்ந்த தாயார் ஒருவர் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார்.

அதேவேளை, சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு அஞ்சலிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தென்கைலாய ஆதீன குருமுதல்வர் அகத்தியர் அடிகளாரால் முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்ற உறவுகள் கதறி அழுது, கண்ணீர் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களுடைய உறவினர்கள் என பெருந்திரளானவர்களின் பங்குபற்றலுடன் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

# நல்லிணக்கத்துக்கு இடையூறான கருத்துகளைக் கண்டிப்போம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்



முதல் போதகரென அறியப்படும் ஜெரோம் பெர்னாண்டோ என்ற நபரால் அண்மையில் தெரிவிக்கப்பட்ட பொறுப்பற்றதும் - அவமரியாதையுமான கருத்துகள் வெறுக்கத்தக்கவையும், அதிருப்திக்குரியவையுமாகும். அவரால் முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கு எமது கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தூய பௌத்த தர்மத்தை உறுதியாக நம்பும் மற்றும் பௌத்த தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் பௌத்தரான இந்த போதகரின் கருத்து குறித்து நான் மிகவும் வருந்துகிறேன்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் நல்லிணக்கம், சகோதரத்துவம்,மனித நேயம் ஆகியவை வலுவாகக் கட்டியெழுப்பப்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். அதே வேளை, இதுபோன்ற பொறுப்பற்ற கருத்துகளால் மத ரீதியிலான மோதல்களும், வெறுப்பும் ஏற்பட்டு அனைவர் மனதிலும் தீய எண்ணங்களே ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

இந்நாடு நீண்ட காலமாக தூய பௌத்த தர்மத்தால் போஷிக்கப்பட்டுள்ளது.பௌத்தம் என்பது ஓர் உலகளாவிய போதனையாகும். இது எந்த மதத் துக்கோ தேசத்துக்கோ உரித்து டையதல்லாத ஓர் உலகளாவிய பொது மதமாகும். குரோதத்துக்குப் பதிலாக பரிவையும், விமர்சனத்துக்குப் பதிலாக திறனாய்வையும் அனைத்து உயிரினங்களிடமும் பெரும் கருணையையும் காட்ட உலகுக்கு போதித்த ஒரு மதமாகும்.

பௌத்த மதத்தின் சமரச இணக்கமான ஏற்பாடுகளே பிற அனைத்து மதங்களையும் மதிப்பது போலவே, அவற்றைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தை வழங்குவதற்கும் வழிவகுத்துள்ளது என்பது வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். குறித்த சலுகையை சந்தர்ப்பவாதமாகப் பயன்படுத்தி பௌத்த தர்மத்துக்கு எதிராக தவறானதும் அவமரி யாதையானதுமான கருத்துகளை வெளியிடுவதற்கு எந்தவொரு நபருக்கோ அல்லது எந்தவித குழுக்களுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது.

முன்னர் சுட்டிக்காட்டிய பொறுப்பற்றதும் அவமரியாதையுமான கருத்துகள் எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாத ஒன்றாகும். இதன் பின்னணியிலுள்ள சூழ்ச்சி யாது என்பதை வெளிப்படுத்துவதும், இவ்வாறு அவமதிக்கும் வகையிலான கருத்துகளுக்கு எதிராக மேற்கொள்ள முடியுமான சகல நடவடிக்கைகளை எடுப்பதும் அரச பொறிமுறை சார்ந்த பொறுப்பாகும்.

இது தொடர்பாக எம்மைப் போலவே முழு நாடும் இதில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகின்றது என்பதை நினைவில் கொள்ளவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எனது தொகுதி மக்களின் பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதியிடம் செல்வதில் தப்பில்லை

## நாட்டின் ஜனாதிபதி அனைவருக்கும் பொதுவானவரென்கிறார் ரோஹினி கவிரத்ன

(மாத்தளை நிருபர்)

எனது தொகுதி மக்களின் அன்றாட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக ஜனாதிபதியிடம் செல்வதில் எந்தவிதமான தவறும் கிடையாது. நாட்டில் ஜனாதிபதி அனைவருக்கும் பொதுவானவர் என மாத்தளை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்தார்.

தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்ததாகவும் தான் கட்சி மாறிவிட்டதாகவும் சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளமை குறித்து விவரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எனது லக்கல தொகுதி மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்துகொள்ள ஜனாதிபதியிடம் தான் செல்ல வேண்டுமென்றால் அப்படிச்செல்வதில் என்ன தவறு இருக்கிறது? எனது தொகுதி மக்கள் சுத்தமான குடிநீர் இன்றி பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் உள்ளிட்ட பல்வேறு



பிரச்சினைகள் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றை நிவர்த்தி செய்துகொள்ள நாட்டில் இருக்கும் ஒரே ஜனாதிபதி என்ற அடிப்படையில் அவரிடம் செல்வதில் என்ன தவறு இருக்கிறது? இதனால் நான் கட்சி மாறிவிட்டேன் என்பதில் எந்தவித உண்மையும் இல்லை.

பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள கல்வி அமைச்சர் என்ற வகையில் சுசில் பிரேம ஜயந்தவிடம் சென்றால் வைத்தியசாலைகள், தாதிமார்கள் சுகாதார சிற்றூழியர்கள், வைத்தியர்கள் சம்பந்தமாக பேச சுகாதார அமைச்சர் என்ற வகையில் கெஹெலிய ரம்புக்கலவிடம் சென்றால், விவசாயிகள் முன்னோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக அமைச்சர் அமரவீரவிடம் சென்றால், காணிப் பிரச்சினைகள் சம்பந்தமாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிடம் சென்றால் நாம் கட்சி மாறிவிட்டோம் எனக் கூறமுடியாது. எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் நாம் எமது மக்கள் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள ஆளுங்கட்சித் தரப்பினரை நாடி அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதில் தவறு கிடையாது.எனது தொகுதி மக்களின் தேவைகளும் - குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதே எனது குறிக்கோள். மாறாக கட்சி தாவுதல் அல்ல.

எனவே, சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் அவர்களின் தேவைகளுக்காக செய்திகளைத் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதும் மக்கள் மத்தியில் தவறான செய்திகளை வழங்குவதும் சிலரின் பொழுதுபோக்காகவுள்ளது.இதனை நான் அலட்டிக்கொள்வதில்லை.

மறைந்த எனது தந்தை விஜயரத்ன பண்டா, மறைந்த எமது மாமனார் கவிரத்ன, மறைந்த எனது கணவர் சன்ஜீவ கவிரத்ன ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆழ்மைமிக்கவர்கள். இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அரசியலில் கால்பதித்த நான் கட்சி மாறுவேன் என்பது சில அரசியல்வாதிகளின் புஸ்வானமான கதை. நான் ஐக்கிய மக்கள் சக்தியைச் சார்ந்தவள். சஜித் பிரேமதாச தலைமையில் நம்பிக்கையுடன் செயற்படுபவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் கடத்தல்: ஆறுபேர் கைது; ஹெரோயினும் மீட்பு



இலங்கையின் தெற்குக் கடற்பகுதியில் 125 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினரும் கடற்படையினரும் இணைந்து மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இலங்கையின் தெற்குக் கடற்பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்திச்சென்ற இழுவைப் படகு ஒன்றை கடற்படையினர் சுற்றிவளைத்து சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது படகிலிருந்த 125 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளை கைப்பற்றியதுடன் 6 சந்தேகநபர்களையும் கைதுசெய்தனர்.

போதைப்பொருள் கடத்திய படகு மற்றும் சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று அழைத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** – உங்கள் புகழ்,செல்வாக்கு உச்சத்தை தொடப்போகின்றது. தடைப்பட்டிருந்த சுப காரியங்கள் இனிதே நடந்தேறும்.

**ரிஷபம்** – தொழில் நிமித்தம் அலைச்சலும், உடல் அசதியும் உண்டு. வெளிநாட்டு நன்மைகள் லாபங்கள் உள்ளன.

**மிதுனம்** – எதிர்பாராத தன அதிர்ஷ்டம் உண்டு, தொழில் வியாபாரத்தில் நீங்கள் தான் இன்றைய சாதனையாளர்.

**கடகம்** – நீங்கள் நீண்ட நாள் திட்டமிட்ட காரியம் இன்று பலனளிக்கப் போகின்றது. தொழிலில் ஈடேற்றம் உண்டு.

**சிம்மம்** – பூர்வீக சொத்துப் பிரச்சினை தீர்ந்து உங்களுக்குரிய பாகம் கிடைக்கும். ஆன்மீக சிந்தனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**கன்னி** – கவனக் குறைவுடன் செயலாற்றினால் குறை கேட்க நேரிடும். மனதில் தேவையற்ற எண்ணங்கள் அலை மோதும்.

**துலாம்** – நீங்கள் விரும்பியவரை மணக்க பெற்றோர் சம்மதம் தெரிவிப்பர். கூட்டு முயற்சிகளில் அதிக லாபங்களைப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** – பழைய கடனை அடைப்பதற்கு புதுக் கடன் தொகை பெறுவீர்கள். சிரித்துச் சிரித்து கழுத்தறுக்கும் நபர்களிடம் எச்சரிக்கை வேண்டும்.

**தனுசு** – தொழில் ரீதியில் இருந்து வந்த சிக்கலகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். உங்கள் யோசனை இன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

**மகரம்** – வீடு மற்றும் வாகனம் இவற்றால் லாபங்களை அடைவீர்கள். தாய் தாய்வழி உறவுகளின் உதவிகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்** – எதிர்ப்பாராத வகையில் நண்பர் ஒருவரின் உதவி கிடைக்கும், மனத்துணிவுடன் காரியம் சாதிப்பீர்கள்.

**மீனம்** – பணக் கொடுக்கல் வாங்களில் இருந்து வந்த பிரச்சினை தீரும். குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக எல்லை மீறி செலவு செய்வீர்கள்.

| | |
|---|---|
| **திதி** | :அமாவாசை பி.ப. 9.23 வரை பின் பிரதமை (வளர்) |
| **நட்சத்திரம்** | :பரணி மு.ப.7.29 வரை பின் கார்த்திகை |
| **யோகம்** | :மரண யோகம் மு.ப. 7.29 வரை பின் சித்தயோகம் |
| **வார சூலை** | :மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | :மு.ப. 5.52 – 6.52 மணி வரை |
| **ராகு காலம்** | :10.22 – 11.52 மணி வரை |
| **எமகண்டம்** | :2.52 - 4.22 மணி வரை |
| **குளிகை** | :7.22 – 8.52 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | :கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிஷ்டம்** | :பரணி, பூரம், பூராடம் (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | :கார்த்திகை விரதம், அமாவாசை விரதம். |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# கிழக்கு மாகாண ஆளுநர் - இந்திய உயர்ஸ்தானிகர் சந்திப்பு



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை நேற்று முன்தினம் (17) சந்தித்துள்ளார்.

செந்தில் தொண்டமான் ஆளுநராகப் பதவிப் பிரமாணம் செய்த பின்னர், இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேவை இந்திய இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

# பிரேசில் அரசாங்கத்தினால் இலங்கைக்கு மருத்துவப்பொருட்கள்



பிரேசில் கூட்டுறவு முகவரமைப்பின் ஊடாக பிரேசில் கூட்டாட்சி குடியரசு இலங்கைக்கு 10,000 இன்சுலின்குப்பிகள், எட்டு மில்லியன் பொலிப்ரொப்பிலின் டிப்கள் உட்பட மருத்துவப்பொருட்களை அன்பளிப்பாக வழங்கியது.

வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவிடம் மேற்படி மருத்துவப் பொருட்களை இலங்கைக்கான பிரேசில் தூதுவர் செர்ஜியோ லூயிஸ் கேனஸ் கையளித்தார்.

இதன்போது இலங்கைக்கும் பிரேசிலுக்குமிடையிலான நீண்டகால நட்புறவை எடுத்துரைத்த வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய,பிரேசில் அரசாங்கத்தின் குறித்த நல்லெண்ண செயற்பாட்டுக்கு பாராட்டும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள்அமைச்சின் பணிப்பாளர் நாயகம்ஓ.எல்.அமீர்அஜ்வாத் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/



இதோ Mogo Studios! இல்
உங்களுக்கானதோர் வாய்ப்பு
3D ANIMATION WORKSHOP
character and prop animation இல்
நீங்கள் ஆர்வமும் திறமையும் உள்ளவரா?
இப்பொழுதே பதிவு செய்திடுங்கள்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 19ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# கவனிக்கப்பட வேண்டிய உயர்நீதிமன்றத் தீர்ப்பு!

**ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்க அரசியலமைப்புச் சட்டத்தின்படி முன்மொழியப்பட்ட திருத்தத்தை எதிர்க்கும் மனுக்களை உயர்நீதிமன்றம் அண்மையில் தள்ளுபடி செய்தது.**

ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்க அரசியலமைப்புச் சட்டத்தின்படி முன்மொழியப்பட்ட திருத்தத்தை சவால் செய்யும் மனுக்களை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம், இது தொடர்பில் இந்திய உயர் நீதிமன்றம் வழங்கிய பல்வேறு தீர்ப்புகளை உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளது.

ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்கும் சட்டமூலத்திற்கு உயர்நீதிமன்றம் பச்சைக்கொடி காட்டியுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அண்மையில் தெரிவித்திருந்தமை, LGBTQ+ உரிமை செயற்பாட்டாளர்களால் 'வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்றம்' என பாராட்டப்பட்டுள்ளது.

'பாலியல் நோக்குநிலையை தண்டனைக்குரிய குற்றமாக மாற்றும் விதிகளைத் திருத்த உத்தேசித்துள்ள தண்டனைச் சட்டம் (திருத்தம்) சட்ட வடிவம் 2023' இன் அரசியலமைப்பு தகுதி நிலையை கேள்வி கேட்கும் மனுக்களின் தொகுப்பை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை அடுத்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.

அரசியலமைப்பின் 121(1) சரத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில், ஒரு சட்டமூலத்தின் விதிகள் அரசியலமைப்பிற்கு முரணானதா என்பதை தீர்மானிக்கும் மூன்று மனுதாரர்கள், அதாவது ஓய்வுபெற்ற இராணுவ பிரிகேடியர் கே.அத்துல எச்.டி.சில்வா, ஷெனாலி டி.வடுகே, மற்றும் ஜெஹான் ஹமீட் ஆகியோர் நீதிமன்றத்தை அணுகினர். 'இந்த தண்டனைச்சட்ட (திருத்தம்) மூலம் 2023, அரசியலமைப்பின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு முரணானது என அறிவிக்கக் கோரி, இந்த மனு, சிறப்புப் பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதோடு, வாக்கெடுப்பு மூலம் சட்டமூலத்திற்கு அங்கீகாரம் கோரியது.

இருப்பினும், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஜெயந்த ஜெயசூரிய தலைமையிலான அமர்வு, மனுதாரர்களின் சமர்ப்பிப்புகள் கற்பனையான கருதுகோள்கள் எனக் கண்டறிந்து அவை தகுதியற்றவை என்று கூறியது. வயது வந்தோருக்கு இடையே உள்ள நெருக்கமான செயல்களை குற்றமாகக் கருதும் தண்டனைச் சட்டத்தின் 365 மற்றும் 365ஏ பிரிவுகளை இரத்து செய்வது அரசியலமைப்புக்கு எதிரானது என்பதை நிறுவ மனுதாரர்கள் தவறிவிட்டனர் என்று நீதிமன்றம் கூறியது.

மேலும், மனுதாரர்களால் இந்த மசோதா ஒட்டுமொத்தமாக அல்லது அதிலுள்ள எந்தவொரு சரத்தும் அரசியலமைப்பின் எந்தவொரு விதிமுறைக்கும் முரணானது என்பதை காட்ட முடியவில்லை என்று கூறிய நீதிமன்றம், இந்த சட்ட மசோதா 2023 இலங்கை அரசியலமைப்புடன் ஒத்துப்போகிறது என்று முடிவு செய்தது.

உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில், "வயது வந்தவர்கள் தங்கள் பாலின நோக்குநிலையைப் பொருட்படுத்தாமல் சம்மதம் தெரிவிக்கும் பாலியல் செயற்பாடுகளை குற்றமற்றவர்களாக்குவது மனித கண்ணியத்தை மட்டுமே அதிகரிக்கும். ஆனால், சட்டப் புத்தகத்தில் பராமரிக்கப்பட வேண்டிய குற்றமாகக் கருத முடியாது" என்று கூறியது.

தண்டனைச் சட்டம் (திருத்தம்) மசோதா 2023, "சட்டத்தின் முன் அனைத்து நபர்களும் சமமாக இருக்க வேண்டும்" மற்றும் "சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உரிமையுடையவர்கள்", "அவர்களது பாலியல் நோக்குநிலையைப் பொருட்படுத்தாமல்" உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது LGBTQ+ நபர்களுக்கு அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மேம்படுத்த முயல்கிறது. இதனால் அவர்கள் சமூகத்தில் கண்ணியத்துடன் வாழ முடியும்.

ஆரம்பத்தில் மார்ச் 17ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இந்த மசோதா ஏப்ரல் 4ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், தற்போது அது சட்டமாக மாறுவதற்கு முன்னர் 225 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், தண்டனைச் சட்டத்தின் 365ஆவது பிரிவை இரத்து செய்து அதற்குப் பதிலாக அதன் முழுப் பிரிவு 365ஏ- என்று சேர்க்கப்படும்.

பிரிவு 365 இன் படி, 1883 இல் இருந்தபடி, "எந்தவொரு ஆண், பெண் அல்லது விலங்குடன் இயற்கையின் ஒழுங்குமுறைக்கு எதிராக தானாக முன்வந்து உடலுறவு கொள்பவர், பத்து ஆண்டுகள் வரை அதற்கு மேலும் சிறைத் தண்டனையுடன் தண்டிக்கப்படுவார். அபராதமும் விதிக்கப்படும்" என்று கூறுகிறது.

இருப்பினும், 1995ஆம் ஆண்டில், 18 வயதுக்கு மேற்பட்ட ஒருவரால், 16 வயதுக்குட்பட்டவர்களைப் பொறுத்தமட்டில், அத்தகைய குற்றத்தைச் செய்தால், ஏற்பட்ட காயங்களுக்கு அவர்களுக்கு 10-20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை, அபராதம் மற்றும் இழப்பீடு வழங்கப்படும் என்று திருத்தப்பட்டது.

முந்தைய இலங்கை குற்றவியல் சட்டத்தின் பிரிவு 365 இந்திய தண்டனைச் சட்டம் 1860இன் பிரிவு 377ஐ ஒத்ததாக இருந்தபோது, 1995 திருத்தத்திற்குப் பிறகு விதி மாறியது. அதன் தீர்ப்பில், இலங்கையின் தண்டனைச் சட்டம் 1883ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க அவசரச் சட்டத்தின் மூலம் இயற்றப்பட்டது என்றும், இது இந்திய மெக்காலே ஆணைக்குழுவால் உருவாக்கப்பட்ட இந்திய தண்டனைச் சட்டத்தை ஒத்துள்ளது என்றும் இலங்கை நீதிமன்றம் குறிப்பிட்டது.

இச்சட்டம் திருத்தப்பட்டால், மனிதர்களுக்கு இடையேயான இயற்கைக்கு மாறான உடலுறவை குற்றமாக்குவதற்கான விதி மாற்றப்பட்டு, மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையேயான பாலினத்தை குற்றமாக்கும் விதியாக மாற்றப்படும். அதாவது புதிய பிரிவு 365 இயற்கையின் ஒழுங்கிற்கு எதிராக தானாக முன்வந்து விலங்குடன் உடலுறவு கொள்பவரை தண்டிக்கும். வயது வந்தவர்களின் சம்மதத்தின் மூலம் தனிப்பட்ட முறையில் ஈடுபடும் ஓரினச்சேர்க்கை நடவடிக்கைகளை குற்றமாக கருதுவதற்கு அரசியலமைப்பு அதிகாரம் உள்ளது என்று முடிவு செய்வதற்கு எந்த அடிப்படையும் இல்லை என்று நீதிமன்றம் நியாயப்படுத்தியிருப்பது மிகவும் முக்கியத்துவமானது. மனித உரிமைகளை, சுதந்திரங்களை பற்றிப் பேசுவோர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை கவனத்திற்கொள்தல் வேண்டும்.

## இன்றைய நாளில்...

* 1535 – பிரெஞ்சு நாடுகாண் பயணி இல்சாக் கார்ட்டியே வட அமெரிக்கா நோக்கிய தனது இரண்டாவது பயணத்தை 110 பேருடன் மூன்று கப்பல்களில் ஆரம்பித்தார்.
* 1834 – இலங்கையில் பாடசாலைகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டது.
* 1961 – சோவியத்தின் வெனேரா-1 வெள்ளிக் கோளைக் கடந்தது. பூமியை விட வேறொரு கோளைக் கடந்த முதலாவது விண்ணூர்தி இதுவாகும்.
* 1971 – சோவியத் ஒன்றியம் மார்ஸ்-2 விண்கலத்தை ஏவியது.
* 1978 – விடுதலைப்புலிகள் மீதான தடை ஜே.ஆர்.ஜயவர்தன அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

# நந்திக்கடல் மௌனமாக அழுதது..!



***"போர் நிச்சயம் முடியும், தலைவர்கள் கைகுலுக்குவார்கள்,***
***அந்த வயதான பெண்மணி தியாகியான தனது மகனுக்காக காத்துகொண்டே இருப்பாள்,***
***தன் அன்பிற்குரிய கணவனுக்காக அந்த இளம்பெண் காத்திருப்பாள்,***
***நாயகர்களான தமது அப்பாவிற்காக அந்த குழந்தைகளும் காத்திருப்பார்கள்,***
***நான் அறியவில்லை,***
***யார் நமது தாய் மண்ணை விற்றார்கள்?***
***ஆனால், நான் பார்த்துவிட்டேன் விலைகொடுக்கப் போவது யார் என்று"***

***பலஸ்தீன கவிஞர் மஹ்மூத் தர்விஷின் இந்த கவிதை போரையும், அதன் விளைவுகளையும் அழகாக விளக்குகின்றது. முள்ளிவாய்க்கால் மே மாதம் பலரது வாய்களும் முணுமுணுக்கும். ஆனால், அதன் வலிகளையும் அதன் விளைவுகளையும் இன்றும் அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்குத்தான் தெரியும் அது வலி நிறைந்த மாதம் என்று.***

ஆம் அந்த காலகட்டம்... உயர்தரத்தில் அடியெடுத்து வைத்த காலப்பகுதி, 2006ஆம் ஆண்டு போர் மேகங்கள் எம்மண்ணை சூழத் தொடங்கின. தொடர்ச்சியாக போர் மற்றும் இடப்பெயர்வுகளை சந்தித்த எமக்கு அது ஒன்றும் புதிதாக இருந்ததில்லை. 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி மாவிலாற்றில ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தை தொடர்ந்து 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி யு-9 வீதி மூடப்பட்டதுடன், மணலாறு தொடக்கம் முகமாலை வரை நான்கு முனைத் தாக்குதலை இலங்கை அரசாங்கம் தொடுத்தது. 2006ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையானது முன்னைய இராணுவ நடவடிக்கைகள் போன்றதல்ல என்பதை அங்கு அனுபவித்த மக்கள் நன்கறிவார்கள். அதிகமான இராணுவ நடவடிக்கைகளில் ஒருவழித்தாக்குதல் திட்டத்தையே இராணுவம் முன்னெடுத்திருந்தது. எனினும், 2006ஆம் ஆண்டு நான்கு முனைத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது, தாக்குதல் விரிவுபடுத்தப்பட்டு வான், தரை, கடல்மார்க்கம் மாத்திரமன்றி, ஆழ ஊடுருவும் அணியினரின் தாக்குதலையும் எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு மக்கள் தள்ளப்பட்டிருந்தனர்.

எனினும், எமது கல்வி நடவடிக்கைகள் மக்களின் அன்றாட வாழ்க்கை சாதாரணமாகவே சென்றுகொண்டிருந்தது, எனினும், 2007ஆம் ஆண்டிலிருந்து சாவுகள் மலிந்த பூமியாக மாறத் தொடங்கியது, ஆட்லறி, பல்குழல் எறிகணைகள், மற்றும் விமானத் தாக்குதல்கள் எம்மை அச்சத்தின் உச்சிக்கே கொண்டு சென்றன. வீடுகள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் பதுங்கு குழிகள் அமைக்குமாறு விடுதலைப்புலிகளால் அறிவுரை வழங்கப்பட்டு எங்கும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டன.

பாடசாலை சென்றால் முதலில் பதுங்கு குழிகளை சுத்தம் செய்வதே எமது முதற்கடமையாகியது, விமானத்தின் இரைச்சல் கேட்டவுடனே எமக்கு அபாய ஒலி எழுப்பபடும், உடனே பதுங்கு குழிக்குள் செல்வதும், விமானம் தாக்குதல் நடத்திச் சென்றவுடன் மீண்டும் வகுப்பறைக்கு சென்று கற்பதும் என போரும் வாழ்வும் ஒன்றிப்போனது.

நாட்கள் செல்ல செல்ல வேட்டு ஒலிகளும், எறிகணைத் தாக்குதலும் எம்மை நெருங்கி வரத் தொடங்கின, வன்னிப்பெருநிலப்பு நோக்கி இராணுவம் அகலக்கால் பதித்தது. மக்கள் பல மாவட்டங்களிலிருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி நோக்கி இடம்பெயரத் தொடங்கினர், இவற்றிற்கு எல்லாம் முகம்கொடுத்து உயர்தரப்பரீட்சைக்கு முகம்கொடுத்தோம். அன்றாடம் நண்பர்களின், உறவினர்களின், உடன்பிறப்புக்களின் இழப்புச் செய்திகள் பேரிடியாக வந்து இறங்கும். அவற்றிலிருந்து மீண்டெள முன்னர் அடுத்த செய்தி எமக்காக காத்திருக்கும், அழுகை வர மறுத்தது. முன்னோக்கி செல்ல வேண்டிய நிர்ப்பந்தம்... கடந்து சென்றோம். வன்னிப்பெரு நிலப்பரப்பு எங்கும் மரண ஓலம்... தாய்மாரின் கண்ணீராலும், எம்மவர்கள் சிந்திய இரத்தத்தாலும் வன்னி அன்னை மௌனமாக அழுதுகொண்டிருந்தாள்.

2008ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் அது... நாமும் இடம்பெயரவேண்டி நிலை. வீதியால் செல்லமுடியாது வாகன நெரிசல் எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல்... புதுக்குடியிருப்பு நோக்கி எமது பயணம்... எங்கிருப்பது..? என்ன செய்வது..? ஆம், மக்கள் பலர் தங்கள் காணிகளை திறந்துவிட்டனர் யாரும் எங்கு வேண்டுமானாலும் கொட்டகை அமைத்து இருக்கலாம். ஆனாலும் பதுங்கு குழியே முக்கியமாகியது. வீடுகள் பதுங்கு குழிகளாக மாறின. தினம் தினம் போராட்டம். ஓர் இடம்... ஆனால், இரண்டாவது நாளே வேறிடம். புதுக்குடியிருப்பு, கைவேலி, தேவிபுரம், வல்லிபுரம், சுதந்திரபுரம் என ஓடிக்கொண்டிருந்தோம். நிற்கவில்லை. பல்குழல் எறிகணைக்கோ, விமானத் தாக்குதலுக்கோ முகம்கொடுக்க முடியவில்லை.

அரசாங்கத்தால் முதல் பாதுகாப்பு வலயம் ஒட்டுமொத்த மக்களும் அங்கு தஞ்சமடைய தனது மிலேச்சதனத்தை காட்டியது. பல்குழல் எறிகணை மூலம் அரசாங்கம் கொத்துக் கொத்தாக கொன்று குவித்தனர் மக்களை. அன்றே அங்கிருந்து தேவிபுரம் காட்டுவழியாக இரணப்பாலை நோக்கி மக்கள் சென்றனர். இருபுறமும் வேட்டுகளும், பல்குழல் எறிகணையும், தொடர மக்களின் அழுகுரல்களுக்கு மத்தியில் நாமும் சென்றோம். ஆனாலும் ஒரு பாலத்தை கடந்து திரும்புவதற்கு முன்னரே ஆறு இரத்தமாக ஓடியது. ஆம், விமானத் தாக்குதல் மூலம் அந்த பாலம் அழிக்கப்பட்டது. புல உயிர்களை காவுகொண்டது. தப்பியதை நினைத்து ஆறுதல் அடைவதா அல்லது இறந்த உறவுகளை நினைத்து அழுவதா எனத் தெரியாது துடித்த நாட்கள் அவை. அன்றிலிருந்து பாதுகாப்பு வலயத்தை நோக்கி செல்ல மரணபயம்...

இரணப்பாலையில் மறுக்கமுடியாத ஓர் இரவு... பல்குழல் எறிகணைக்கு தாக்குப்பிடிக்கமுடியாத நிலையில், அன்றைய தினம் இரவே மாத்தளன், பொக்கணை என சென்று இறுதியாக முள்ளிவாய்க்கால் என எமது கால்களும் சென்றன.

உணவுக்காக வரிசையில் நின்ற மக்கள், வைத்திய வசதியின்றி தவித்த மக்கள், இறுதி நாட்களில் குடும்பத்தை தொலைத்தவர்கள், உறவுகளை தேடி அலைந்தவர்கள் என அந்த கொடிய நாட்கள் வார்த்தையால் விபரிக்க முடியாதவை. எங்கும் சடலங்கள், கதறல் சத்தங்கள், ஈடுசெய்ய முடியாத இழப்புகள் என மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். இறுதிச்சண்டை இடம்பெற்றுக்கொண்டிருக்க இராணுவத்திடம் மக்கள் சரணடையத் தொடங்கினர். நீண்ட முட்கம்பி வேலிகள், மக்கள் வெள்ளம் வட்டுவாகல் பாலம் நோக்கி மெதுமெதுவாக நகர்ந்த அந்த நாளை இலகுவில் மறந்துவிடமுடியாது.

யார், யாரை காப்பாற்றுவது என்றே தெரியாது வழிகளில் சிதறிக்கிடந்த உறவுகளின் மேல் ஏறிச்சென்ற அந்த நாளில் மனிதம் மரணிக்க, எல்லாத் தெய்வங்களும் கண்மூடி மௌனமாக இருக்க, இந்த உலகத்தின் ஓர் மூலையில் ஓர் இன அழிப்பு அரங்கேறிமுடிந்தது. கடலன்னை சாட்சியாகி மௌனமானால், முள்ளிவாய்க்கால் மண், தன் மக்களின் குருதியில் சிவந்தாள். இறுதியாகத் திரும்பி பார்த்தபோது அழுகுரல்களும், கரும்புகையுமே சூழ்ந்திருந்தது. எல்லாற்றையும் இழந்து எதுவுமின்றி எதிர்காலம் தெரியாது சென்ற அந்த நாளிலாவது கட்சி, இனபேதமின்றி நினைவேந்தல் செய்யுங்கள். இன்று நீங்கள் சர்வதேசத்தில் குரல்கொடுக்க அன்று நாம் கொடுத்த விலைகள் ஏராளம்... எவற்றாலும் அவற்றை ஈடுசெய்ய முடியாது. போரின்றி சமாதானம் சூழட்டும் இவ்வுலகில்.

**ஷாலி**

# மஸ்ஜிதுல் அப்றார் பள்ளிவாசலின் சொத்துகளைப் பாதுகாப்போம்!



மஸ்ஜிதுல் அப்றார் பள்ளிவாசல் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இலங்கையில் முதலாவது பள்ளிவாசல் என்று பெயர் பெற்று விளங்கும் இப்பள்ளிவாசல் ஆரம்ப காலங்களில் "மத்சம்மார்கள்" என்று அழைக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பாளர்களால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் 1956ஆம் ஆண்டு முதல் "தர்மகர்த்தாக்கள்" (Trustees) என்ற பெயரால் இலங்கையில் உள்ள பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் அழைக்கப்படலாயினர். அன்று முதல் இன்று வரை பல்வேறு தர்மகர்த்தாக்கள் மூலம் இப்பள்ளிவாசல் சிறந்த முறையில் பரிபாலனம் செய்யப்பட்டு வந்துள்ளது. அத்தகைய நேர்மையான, சமூக உணர்வு மிக்க மத்சம்மார்கள் மற்றும் தர்மகர்த்தாக்கள் அனைவரினதும் பள்ளிவாசலுக்கும் எமது ஊருக்குமான அர்ப்பணிப்புகள் நிறைந்த சேவைகளை எல்லாம் வல்ல அல்லாஹ் அங்கீகரித்து அவர்களுக்கு அருள் புரிவானாக!

"மனிதர்களுக்கு நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தாதவன் ஆவான்" என்ற நபி மொழிக்கு ஏற்ப இப்பள்ளிவாசலை சிறப்பாக நிர்வகிப்பதற்குத் தேவைப்படும் செலவுகளை ஈடுசெய்வதற்காக ஆரம்ப காலங்களிலிருந்தே இவ்வூரைச் சேர்ந்த பல நல்லுள்ளம் கொண்டவர்கள் திட்டமிட்டு பல சொத்துகளை பள்ளிவாசலுக்காகக் கொள்வனவு செய்துள்ளனர், நிர்மாணித்துள்ளனர், வக்பு செய்துள்ளனர். அத்தகைய சொத்துகளை இப்பள்ளிவாசலுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தவர்களை நாம் அனைவரும் நன்றியுணர்வுடன் நினைவுகூர வேண்டியுள்ளதோடு, அவர்களுக்காக பிரார்த்திப்பபோம்! அவர்களது அர்ப்பணிப்புகளால் எமது பள்ளிவாசலுக்கு கிடைக்கப் பெற்றுள்ள சொத்துகளை பராமரிப்பது, பாதுகாப்பது மற்றும் வளர்த்தெடுப்பது பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களினதும் ஊர் மக்களினதும் பொறுப்புமிக்க ஒரு கடமையாகும் என்பதில் ஐயமில்லை.

இந்த வகையில் இப்பள்ளிவாசலுக்கு நிரந்தர வருமானம் ஈட்டித்தரும் வகையில் சொத்துகளைப் பெற்றுத் தந்தவர்களை ஊர் மக்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதும் ஞாபகப்படுத்துவதும் அச்சொத்துகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதுமே இத்துண்டுப்பிரசுரத்தின் பிரதான நோக்கமாகும்.

**மஸ்ஜிதுல் அப்றாருக்குரிய நிரந்தர சொத்துகள்**

**01. கொள்ளுப்பிட்டி 'சென் அந்தனீஸ்' மாவத்தையில் இரு வீடுகள்**

மருதானை கடற்றொழிலாளர்கள் சங்கத்தின் அர்ப்பணிப்புகள் மூலம் இப்பள்ளிவாசலுக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு பிரதான நிரந்தர வருமானத்துக்கான ஒரு சொத்தாக இது விளங்குகின்றது. ஆரம்ப காலங்களில் அதிகாலையில் பல்வேறு சிரமங்களுடன் பாதுகாப்பில்லாத தோணிகளில் மீன்பிடிப்பதற்காக அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து கடலுக்குச் செல்லும் மீனவர்கள் ஒரு நாளைக்கு ஒரு தோணிக்கு ஒரு ரூபா வீதம் மஸ்ஜிதுல் அப்றார் பள்ளிவாசலை நிர்வாகம் செய்வதற்காக கொடுத்து வந்துள்ளார்கள். இப்பணம் பள்ளிக்குரிய வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு சேகரிக்கப்பட்டு வந்தது. 1958ஆம் ஆண்டு பள்ளிவாசலின் தர்மகர்த்தாக்களாக விளங்கிய மர்ஹூம்களான எம்.சி.எம்.அபூபக்கர் மரிக்கார் ,ஓ.எல்.எம்.அப்துல் ஹமீத் ஆகியோர் அப்பணத்தை வங்கியிலிருந்து மீளப்பெற்று கொழும்பு, கொள்ளுப்பிட்டி சென் அந்தனீஸ் மாவத்தையில் இரு வீடுகளைக் கொள்வனவு செய்து பள்ளிவாசலுக்கான நிரந்தர வருமானத்துக்கான ஏற்பாட்டைச் செய்தனர்.

**02. மருதானை பாக்கீர் மாக்கார் அவனியூவில் 10 கடைகள் நிர்மாணம்**

மருதானை மீனவர் சங்கத்தினர் தாம் பள்ளிக்காக சேகரித்து வந்த நிதி மூலம் மேற்படி 10 கடைகளை இப்பள்ளிவாசலுக்காக நிர்மாணித்துக் கொடுத்ததன் மூலம் மஸ்ஜிதுல் அப்றாருக்கான மற்றுமொரு நிரந்தர வருமானத்துக்கான ஏற்பாட்டையும் மேற்கொண்டார்கள்.

இவ்விரு சொத்துகளும் மருதானை மீனவர் சங்கத்தினரின் முழுமையான பங்களிப்புக் காரணமாக மஸ்ஜிதுல் அப்றாருக்குக் கிடைக்கப் பெற்ற நிரந்தர வருமானத்துக்கான சொத்துகளாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் இவ்வுயர்ந்த பணிகளுக்காக பூரணமான நற்கூலிகளை அவர்களுக்கு வழங்க வேண்டும் என பிரார்த்திப்போமாக! மேலும், மீனவர் சங்கத்தினர் தமது தொழிலை நன்கு விருத்தி செய்து சிறப்பாக வாழ்வதற்கும் இன்னும் பல சேவைகளை எமது ஊருக்குச் செய்வதற்கும் அனைத்தின் மீதும் வல்லமைமிக்க அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிவானாக!

**03. மருதானை வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று கடைகள்**

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அப்றாருக்குரிய சொத்து மூலம் கிடைக்கப்பெற்று வந்த வருமானத்தையும் ஊர் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதிகளையும் பயன்படுத்தி மருதானை வீதியில் மூன்று கடைகள் நிர்மாணிக்கப்பட்டு பள்ளிவாசலுக்கான மற்றுமொரு நிரந்தர வருமானத்துக்கான ஒரு சொத்து உருவாக்கப்பட்டது. இதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக!

**04. மர்ஹூம் ரிபாய் ஹாஜியார் மூலமான நிரந்தரச் சொத்து**

மருதானை வீதியில் அமைந்துள்ள தற்போது பிரதான மீன் விற்பனை நிலையம் இயங்கி வருகின்ற காணியை மர்ஹூம் இஸட்.ஏ.எம்.ரிபாய், மஸ்ஜிதுல் அப்றாருக்காக அன்பளிப்புச் செய்தார். இதன் மூலம் இப்பள்ளிவாசலுக்கு மற்றுமொரு நிரந்தர வருமானத்துக்கான சொத்து கிடைக்கப்பெற்றது. எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரது இந்த நன்கொடையை ஏற்று பரிபூரண நற்கூலிகளை வழங்குவானாக!

**05. சுனாமி ஞாபகார்த்த வீட்டுத் தொகுதி**

மர்ஹூம் டபிள்யூ.எம்.ஹனபியினால் மஸ்ஜிதுல் அப்றாருக்கு வழங்கப்பட்ட காணியில் சுனாமி ஞாபகர்த்த வீட்டுத் தொகுதி பள்ளிவாசலுக்கான நிரந்தர வருமானத்தைப் பெற்றுத்தரக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்டது. இக்கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு ஊர் மக்கள், பிரதானமாக மர்ஹூம் ரிபாய் மற்றும் அவரது குழுவினர், ஊருக்கு வெளியில் உள்ள சகோதர, சகோதரிகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் மூலம் நிதி வசதிகள் கிடைக்கப் பெற்றமை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். இதில் 51 வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

## நக்கல் நமசிவாயம்

**ஒரு பக்கம் தமிழ்க்கட்சிகளுடன் பேச்சு... மறுபக்கம் போர் வெற்றிவிழாக் கொண்டாட்டம்.. ஜனாதிபதி ஐயாவ ரணில் ராஜபக்ஷ எண்டு ஆக்கள் சொல்லுறதிலயும் தப்பில்லைத்தான்..!**



# முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு நந்திக்கடலில் ரவிகரன் தலைமையில் அஞ்சலி





(விஜயரத்தினம் சரவணன்)

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் தலைமையில் நேற்று நந்திக்கடலில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அந்தவகையில் நந்திக்கடலில் உயிர்நீத்த உறவுகளுக்கு மலர்தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளின் ஆத்மசாந்திவேண்டி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த அஞ்சலியின் பின்னர் ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினோம் என அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கரைதுறைப்பற்று தொகுதிக் கிளை செயலாளர் அ.ஜெ. பீற்றர் இளஞ்செழியன், முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இ. ஜெகதீஸ்வரன் தமிழரசுக்கட்சி மூலக்கிளைகளின் பிரதிநிதிகளான சிவகுமார்,ஜெறோம்சன், மிதுன் சமூக சேவகர் ஜொய்ஸ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com







தமிழினப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினால் 17/05 புதன்கிழமை சாவகச்சேரி மகிழங்கேணி கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தேசத்தின் கஞ்சியான முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது. நினைவேந்தல் மற்றும் தேசத்தின் கஞ்சி வழங்கும் நிகழ்வுகளில் முஸ்லிம் மக்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மைதானங்களுக்கென ஒதுக்கிய நிதி முறையாக செலவழிக்கப்படவில்லை

## அங்கஜன் எம்.பி. குற்றச்சாட்டு



(சாவகச்சேரி நிருபர்)

யாழ். மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் தலா ஒரு பாடசாலை மைதான அபிவிருத்தி செய்யவென என்னால் ஒதுக்கப்பட்ட நிதி முறையாக செலவழிக்கப்படவில்லை என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

17/05 புதன்கிழமை வரணி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற கட்டிட திறப்பு விழா வைபவத்தில் விசேட விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

இளம் தலைமுறைகளை கட்டுக்கோப்புடன் வைத்திருக்க விளையாட்டுதுறை அவசியம் என்பதனை உணர்ந்து நான் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக இருந்த போது யாழ். மாவட்டத்தின் 5பாடசாலை மைதானங்களை அபிவிருத்தி செய்ய தலா 32இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்தேன். தென்மராட்சியில் வரணி மத்திய கல்லூரி மைதானம் தெரிவுசெய்யப்பட்டு நிதியும் ஒதுக்கப்பட்டது.

ஆனால், நிதி ஒதுக்கப்பட்டும் முழுமையாக மைதான வேலைகள் எவையும் இடம்பெறவில்லை என்பது கவலையளிக்கிறது.

வரணி மத்திய கல்லூரியில் பவிலியன் மற்றும் உள்ளக விளையாட்டு அரங்கு ஆகியன அமைக்க கோரிக்கை விடப்பட்டது. ஆனால், ஒதுக்கப்பட்ட 32இலட்சம் நிதி மைதானத்திற்கு மணல் இட்டு நிரப்பவே பயன்பட்டுள்ளது என்பதனை ஏற்க முடியாது. நிதி முழுமையாக செலவழிக்கப்படவில்லை.

நாம் பாடசாலை மைதான அபிவிருத்திக்கு நிதிகளை ஒதுக்கிய போதிலும் அதனைக் கண்காணித்து முறையாக செலவழிக்க வேண்டிய பொறுப்பு வடமாகாண கல்வி அமைச்சையே சாரும்.

இந்த நிதி முழுமையாக செலவழிக்கப் பட்டிருந்தால் மாணவர்கள் பயனடைந்திருப்பார்கள்.

ஏனைய மைதானங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளும் முழுமையாக செலவழிக்கப் படவில்லை என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஒப்பந்தக்காரர்கள் வேலைத்திட்டங்களை நிறைவுபடுத்தவில்லை.

எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறக்கூடாது. வடக்கு மாகாண கல்வி அமைச்சு இது தொடர்பாக கவனம் செலுத்தி ஐந்து மைதான அபிவிருத்திக்கும் ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பாக அறிக்கை ஒன்றினை தயார்ப்படுத்த வேண்டும் என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# மன்னாரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்







(மன்னார் நகர் நிருபர்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (18.05.2023)மன்னார் பஜார் பகுதியில் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் காலை 8 மணியளவில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் போது முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டதோடு நினைவேந்தல் நிகழ்வும் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மதத் தலைவர்கள் , பொதுமக்கள் எனப் பலரும்.கலந்து கொண்டனர்.

இதன்போது இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த மக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி - மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# 'மலையகம் 200' நிகழ்வுகள் நூரளையில் இன்று ஆரம்பம்

(கண்டி செய்தியாளர்)

மலையக பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வந்து குடியேறி 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு நுவரெலியாவில் இன்று விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பாக கண்டியில் ஊடக சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மலையக பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வந்து குடியேறி 200 வருடங்கள் பூர்த்தியான போதும் அவர்களது அடிப்படை உரிமைகள் பல இழக்கப்பட்டுள்ளதாக கண்டி, கட்டுகஸ்தோட்டை, ரனவன வீதியில் அமைந்துள்ள சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் பெ. முத்துலிங்கம் இதன் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிந்தியாவில் இருந்து மலையகத்திற்கு தமிழ் மக்கள் அழைத்து வரப்பட்டு தொழிலுக்காக நாளாந்த சம்பளம் வழங்கப்பட்டது. அத்துடன், பெருந்தோட்ட உற்பத்தித்துறையில் நாடு வளம் பெற ஆரம்பித்தது.

இருப்பினும், கல்வி, சுகாதாரம், பொருளாதாரத் துறையில் அவர்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். எனவே, மலையக தமிழ் சமூகத்தின் 200 வருட பிரச்சினைகளை வெளி உலகிற்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துக் காட்டும் வகையில் இன்றுடன் மூன்று தினங்கள் பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிகழ்வுகள் நுவரெலியா சினிசிட்டா மண்டபத்திலும் மற்றும் குதிரைப் பந்தயத்திடலிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்றார். இந்த விசேட நிகழ்வுக்கு அதிதிகளாக ஜனாதிபதியின் ஆலோசகர் சாகர ரத்நாயக்கா, நெதர்லாந்து தூதுவர், கனடா தூதுவர் முதலானோர் கலந்து கொள்ளவுள்ளனர். மலையகத் தமிழர் உரிமை என்ற நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. மேலும் கலந்துரையாடல்கள், மகாநாடுகள், நடமாடும் மலையக அருங்காட்சியகம் போன்ற பல விடயங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# டெங்கு ஒழிப்பு தொடர்பில் ஊவாவில் கலந்துரையாடல்





(பதுளை செய்தியாளர்)

டெங்கு ஒழிப்பு தொடர்பான ஊவா மாகாண செயற்குழுக் கூட்டம் ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று (18) நடைபெற்றது.

இதன்போது மாகாணத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான பாதுகாப்பு முறைமை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடியதுடன், ஊவா மாகாணத்தை டெங்கு அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகளுக்கு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

நுளம்புகள் பெருகும் இடங்களைச் சோதனை செய்து சுத்தம் செய்வது தொடர்பில் அரச நிறுவனங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பிற நிறுவனங்களின் பிரதானிகளும் தெளிவூட்டல், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகள் மற்றும் கடை வளாகங்களைச் சோதனை செய்தல், ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிப்புகளை வழங்குதல், டெங்கினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்கள் வசிக்கும் பிரதேசத்தில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை அழித்தல், இடங்களைக் கண்டறிந்து கொசுப்புழுக்களை அடையாளம் காணல், வீடுகள் மற்றும் நிறுவன வளாகங்களைச் சுத்தமாகப் பராமரிக்கத் தவறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்து டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

அதேவேளை, டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் வெற்றியடையச் சுகாதார திணைக்களத்தின் தலையீடு மட்டும் போதாது. எனவே, மக்களின் ஆதரவும் தேவை எனச் சுகாதார அதிகாரிகள் மேலும் வலியுறுத்துகின்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் ஆர்.எச்.சி.பிரியந்தி, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டச் செயலாளர்கள், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள், மாகாண சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், 112 படைப்பிரிவுகளின் பிரதானி, தியத்தலாவ விமானப்படையின் கட்டளையிடும் அதிகாரி உள்ளிட்ட அரச நிறுவனங்களின் பிரதானிகள் கலந்துகொண்டனர்.

# கொஸ்லந்தையில் 225 கஞ்சா செடிகள் விசேட அதிரடிப்படையினரால் அழிப்பு



கொஸ்லந்த பொலிஸ் பிரிவிலுள்ள பலஹருவ பிரதேசத்தில் கஞ்சா செடிகள் பயிரடப்பட்ட காணியொன்றை நேற்று முன்தினம் (17) ஹப்புத்தளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டு 6 அடி கொண்ட 225 கஞ்சா செடிகளை மீட்டு அழித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை குறித்த பிரதேசத்திலுள்ள கஞ்சா செய்கை செய்யப்பட்ட காணியை விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டுள்ளனர். அங்கு பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செடிகளை பிடிங்கி அழித்ததுடன் அதில் ஒரு பகுதியை சட்டநடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்த பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com







சப்ரகமுவ மாகாண இராணுவ வீரர் தினம்இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள இராணுவ ஞாபகார்த்த நினைவுத் தூபி வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தில் சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்து 251 படையினர் உயரைத் தியாகம் செய்துள்ளதுடன் ஆயிரத்து 571 பேர் ஊனமுற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன்கிழமை 2023.05.17

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|---|
| மஹஜன சம்பத | 5117 | ரூ. 10,000,000.00 |
| கொவிசெத | 3359 | ரூ. 103,988,072.64 |
| ஜாதிக சம்பத | 1572 | ரூ. 11,009,517.20 |
| தன நிதானய | 1147 | ரூ. 90,489,248.80 |
| ராசி சுப பலன் (Handahana) | 426 | ரூ. 2,846,807.40 |
| மெகா பவர் | 1465 | ரூ. 321,493,106.00 |

மஹஜன சம்பத — ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 4 0 6 9 6 9

கொவிசெத — ஆங்கில எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 05 18 35 48

ஜாதிக சம்பத — வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள்: 3 6 9 1 0 4

தன நிதானய — ஆங்கில எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 09 11 69 75

ராசி சுப பலன் — வெற்றி இலக்கினம்: துலாம் — வெற்றி இலக்கங்கள்: 06 37 39 61 — விசேட இலக்கினம்: துலாம்

மெகா பவர் — ஆங்கில எழுத்து: V — சுப்பர் இலக்கம்: 23 — வெற்றி இலக்கங்கள்: 01 12 16 54
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க

# பாதுகாப்பான குடியகல்வு ஊக்குவிப்பு பிரிவை நடைமுறைப்படுத்தவும்

## பாராளுமன்ற விசேட குழு அறிவுறுத்தல்







சட்டவிரோதமான குடியகல்வைத் தடுக்கும் வகையில் 'பாதுகாப்பான குடியகல்வு ஊக்குவிப்புப் பிரிவை' (Safe Migration Promotion Unit) மூன்று மாதங்கள் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்துமாறும் இலங்கையில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமை மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலமும் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கு பாராளுமன்ற விசேட குழு சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்தது.

இந்த விசேட குழு அதன் தலைவர் சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளே தலைமையில் அண்மையில் கூடியபோதே இந்தப் பணிப்புரை விடுக்கப் பட்டது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஓமானில் இடம்பெற்றதாக அறிக்கையிடப்படும் ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பாய்வு செய்யும் நோக்கில் இக்கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இதில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பிரிவை அமைப்பதன் ஊடாக சுற்றுலா விசாவில் சென்று பின்னர் வேலைசெய்வதற்கான விசாவைப் பெற்று மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான செயற்பாடுகளைத் தடுக்க முடியுமென்று சுட்டிக்காட்டிய இந்த விசேட குழு, இப்பிரிவை முன்னோடித் திட்டமாக மூன்று மாதங்கள் நடைமுறைப்படுத்தி அது குறித்த அறிக்கையைப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தியது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்டவை இணைந்து அங்கம் வகிக்கும் விசேட செயலணியினூடாக இந்தப் பிரிவை நடைமுறைப்படுத்த முடியுமென்றும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சுற்றுலா விசாவில் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் ஓமானில் தொழில் பெற்றுத் தருவதாக ஏமாற்றும் போலி முகவர்களிடமிருந்து அப்பாவித் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த ஆட்சேபனை இல்லாமைக்கான சான்றிதழ் முறைமையை (No Objection Certificate) மீண்டும் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் குழு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு வலியுறுத்தியது. இது தொடர்பில் ஏற்கனவே ஓமான் அரசாங்கத்துடன் கலந்துரையாடப்பட்டிருப்பதாகவும் மீண்டும் இது பற்றிக் கலந்துரையாட நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சத்தியக்கடதாசி வழங்கும் முறையை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயுமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கு பாராளுமன்ற விசேட குழு ஆலோசனை வழங்கியது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான புதிய சட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்திருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்லும்போது போலி முகவர்களால் ஏமாற்றப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பில் பிரதேச செயலக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்குப் பணிப்புரை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹினி கவிரத்ன, மஞ்சுளா திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# லங்காபே டெக்னோவேஷன் விருது அமானா வங்கிக்கு தங்கப்பதக்கம்

LankaPay தேசிய கட்டண வலையமைப்பின் இயக்குநரான LankaClear லிமிட்டெட் வழங்கிய லங்காபே டெக்னோவேஷன் விருது- 2023 இல் அமானா வங்கி, 'ஆண்டின் சிறந்த பொது ATM பெறுபவர் – Category க்கான தங்க விருதைப் பெற்றுள்ளது.

இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதில் உறுதியுடன் செயற்படும் மற்றும் வாடிக்கையாளர்களின் வசதியை மேம்படுத்துவதற்கு தொடர்ந்து பாடுபடும் நாட்டில் பணம் செலுத்தும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் முன்னணியில் இருப்பவர்களை அங்கீகரிப்பதே இந்த விருதுகளின் நோக்கமாகும்.

இந்தச் சாதனை குறித்து அமானா வங்கியின் பிரதம தகவல் அதிகாரி மொஹமட் கியாசுதீன் தெரிவிக்கையில், "புதுமை மற்றும் தொழில்நுட்பம் மூலம் உள்வாங்குவதன் மூலம் வாடிக்கையாளர் அணுகல் மற்றும் வசதிக்காக லங்காபேயினால் மீண்டும் ஒருமுறை அங்கீகாரம் பெற்றிருப்பது பெரும் பாக்கியமாகும். மூலோபாய இடங்களில் சுய வங்கி மையங்களில் முதலீடு செய்வதற்கான எங்கள் மூலோபாயம் எங்களுக்கு பெரும் வெற்றியைக் கொடுத்துள்ளது. தங்கள் நிதியை அணுகுவதற்கு நியாயமான தூரம் பயணிக்க வேண்டிய பல வாடிக்கையாளர்களுக்கும் இது வசதியை அளித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் வளர்ந்து வரும் வட்டி-அடிப்படையிலான பங்கேற்பு வங்கி மாதிரியுடன் முழுமையான இணக்கத்துடன் செயற்படும் நாட்டின் முதல் மற்றும் ஒரே உரிமம் பெற்ற வணிக வங்கி அமானா வங்கியாகும். வளர்ச்சியை செயற்படுத்துதல் மற்றும் வாழ்வை வளப்படுத்துதல் என்ற நோக்கத்துடன் வங்கி தனது வாடிக்கையாளர்களை 33 கிளைகள், 20 சுய வங்கி மையங்கள், 5800+ ATM அணுகல் புள்ளிகள் என வளர்ந்து வரும் வலைப்பின்னல் மூலம் சென்றடைகிறது. eOnboarding ஆன்லைன் கணக்கு திறப்பு சேவைகள், SMS விழிப்பூட்டல்களுடன் கூடிய டெபிட் கார்டு, 24X7 பண வைப்பு இயந்திரங்கள் மற்றும் பெண்களுக்காக பிரத்தியேகமான வங்கி அலகுகள்.

அமானா பேங்க் பி.எல்.சி. என்பது இலங்கை மத்திய வங்கியால் உரிமம் பெற்ற ஒரு தனி நிறுவனமாகும், மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட ஜித்தாவை தளமாகக் கொண்ட ஐ.எஸ்.டிபி குழுமம் வங்கியின் 29.97% பங்குகளை பிரதான பங்குதாரராக கொண்டுள்ளது.

ஐ.எஸ்.டி.பி குழுமம் 57 நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்ட 'ஏஏஏ' தரமதிப்பீடு பெற்ற பலதரப்பு மேம்பாட்டு நிதி நிறுவனமாகும்.

வட்டி அல்லாத வங்கி மாதிரியின் முன்னணி பயிற்சியாளராக அதன் நிலையை உறுதிப்படுத்தும் வகையில் அமானா வங்கிகள் தி ஏசியன் பேங்கரால் உலகின் சிறந்த 100 வலுவான இஸ்லாமிய வங்கிகளில் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டது.

அமானா வங்கியானது ஆர்பன்கேர் நிறுவனத்துடன் அதன் பிரதான அனுசரணையாளராக ஈடுபடுவதைத் தவிர, துணை நிறுவனங்கள், அல்லது இணைக்கப்பட்ட நிறுவனங்களைக் கொண்டிருக்கவில்லை.



அமானா வங்கியின் பிரதம தகவல் அதிகாரி (CIO) மொஹமட் கியாசுதீன், AVP- வைப்புத்தொகை மற்றும் டிஜிட்டல் முன்முயற்சி, அர்ஷாத் ஜமால்டீன் மற்றும் குழு உறுப்பினர்களான ரிபாட் ரிசான், லீலா ஜலில் மற்றும் ஷஹீர் நௌஷாத் ஆகியோர் லங்காபே தொழில்நுட்ப விருதுடன் காணப்படுகின்றனர்.

# உறுதியான வருமானத்தை முதல் காலாண்டில் பதிவு செய்துள்ளது SLT



தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் குழுமம் ( S குழுமம்), 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ரூ. 26.6 பில்லியனை மொத்த வருமானமாகப் பதிவு செய்துள்ளது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2.1% வளர்ச்சியைப் பெற்றுள்ளது. சவால்கள் நிறைந்த சூழலில் மீண்டெழுந்திறன் மற்றும் உறுதியான செயற்பாட்டை வெளிப்படுத்தி S இந்த வளர்ச்சியை எட்டியிருந்தது.

S குழுமத்தின் வருமானத்தில் பிரதானமாக S நிறுவனத்தின் வருமா னமான ரூ. 17.6 பில்லியன் முக்கிய பங்களிப்'பை வழங்கியிருந்தது. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 10.7% அதிகரிப்பாகும். பெரும் பொருளாதாரப் பிரச்சினைகளால் எழும் தாக்கத்தைத் தணித்துக் கொள்வதற்காக குழுமத்தின் முகாமைத்துவம் நிறுவனத்துக்கான தந்திரோபாய நோக்கத்தையும் துரித செயற்பாட்டுத்திட்டத்தையும் கொண்டிருந் ததனூடாக இந்த சாதனைப் பெறுமதியை எட்ட முடிந்திருந்தது. எவ்வாறாயினும், குழுமத்தின் வருமானத்தில் நிறுவனத்தின் மொபைல் சேவைகள் பிரிவினால் குறைந் தளவு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது.

S குழுமத் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "எமது வியாபாரத்தை உறுதி செய்வதில் நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் தொடர்பில் பெருமை கொள்கின்றோம். எமது செயற்பாடுகளையும் கட்டமைப்புகளையும் ஒன்றிணைப்பது மற்றும் எதிர்காலத்துக்கு தயாரான தொழில்நுட்ப நிறுவனமாக மாற்றமடைவது போன்றவற்றை நாம் மேற்கொண்டுள்ளோம். எவ்வாறாயினும், எமது வெற்றிகரமான செயற்பாட்டுக்கு பிரதான காரணியாக எமது இலக்கு அடிப்படையிலான செயற்பாட்டுக் கட்டமைப்பு ஆகியன அமைந்துள்ளன. இவற்றினூடாக, எம்மால் நெருக்கடியான காலப்பகுதியிலும், எதிர்காலத்துக்காக தயார்ப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது." என்றார்.

# சர்வதேசத்தின் ஊடாக தீர்வைப் பெறுவதற்கு தமிழ்க் கட்சிகள் ஓரணியில் திரள வேண்டும்

## தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நிஷாந்தன்

ரணில் விக்கிரமசிங்கவின் போலி நாடகத்தை நம்பி ஏமாறாமல் சர்வதேசத்தின் ஊடாக தீர்வைப் பெறுவதற்கு தமிழ்க் கட்சிகள் ஓர் அணியில் திரள வேண்டும் என தமிழ்த் தேசியப் பண்பாட்டு பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நிசாந்தன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் தமிழ்க் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான இரு சந்திப்புகள் இடம்பெற்ற நிலையில் இரண்டாம் சந்திப்பு உருப்படியான முடிவுகள் ஏதுமின்றி முடிவடைந்தது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் இருந்து தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறார் என்பது தமிழ்க் கட்சிகளுக்கும் மக்களுக்கும் நன்கு தெரியும்.

ஏனெனில், நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்கு இதுவே நல்ல சந்தர்ப்பம் எனக்கூறி தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சிபீடத்தைப் பாதுகாத்தார்.



அக்காலப் பகுதியில் பாராளுமன்றத்தை சுமார் 30க்கும் மேற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.

ஆனால், தற்போது ரணில் விக்கிரமசிங்க தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராகி பிரதமராகி பின்னர் ஜனாதிபதியானார்.

இவ்வாறான ஒரு நிலையில் பாராளுமன்றப் பலம் இல்லாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைத் தரமாட்டார் என்பது அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் நன்கு தெரியும்.

ஆனால், அரசியல் தீர்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து கண்துடைப்பு நடத்துகிறார்.

இத்தகைய செயற்பாடு தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்புவதற்கும் வடக்கில் இராணுவத்தை நிலைகொள்ள வைப்பதற்குமான ஒரு செயற்பாடாகவே பார்க்கக்கூடியதாக உள்ளது.

ஆகவே, தமிழ்க் கட்சிகள் இனியாவது ரணில் விக்கிரமசிங்கவின் நாடகத்தை நம்பி ஏமாறாமல் சர்வதேசத்தின் ஊடாக தீர்வைப் பெறுவதற்கு ஓர் அணியில் முயற்சிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# மகளுக்கு நஞ்சூட்டியதாக குற்றச்சாட்டு; சந்தேக நபருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொக்கா தோட்ட மேற் பிரிவில் தனது 20 வயது மகளுக்கு நஞ்சூட்டினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதவான் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மொக்கா தோட்ட மேற் பிரிவில் நஞ்சூட்டியதாகக் கூறப்பட்டு 20 வயது யுவதி கடந்த 2 ஆம் திகதி இரவு மஸ்கெலியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வேளை சட்ட வைத்திய அதிகாரியிடம் தனது தந்தை தனக்கு நஞ்சூட்டியதாகக் கூறியுள்ளார்.

அதனைத்தொடர்ந்து சந்தேக நபர் டிக்கோயா பகுதியில் உள்ள டில்லிரி பகுதியில் உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் மஸ்கெலியா பொலிஸாரினால் கடந்த 2 ஆம் திகதி இரவு கைதுசெய்யப்பட்டு ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது அவரை மே 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவரை மே 31 வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார் .



ஐக்கிய தொழிலாளர் முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அ. அரவிந்தகுமார் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலியை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்தார். இதன்போது மலையகம் உள்ளிட்ட சமகால அரசியல் நகர்வுகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

# திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நடமாடும் சேவை

(அஷ்ரப் ஏ சமத்)

நீதி அமைச்சு திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் நடமாடும் சேவையொன்றை நடத்தவுள்ளதாக அமைச்சரின் ஆலோசகர் கலாநிதி ஹர்ஷ அபேரத்தின் தெரிவித்தார்.

நீதி அமைச்சு ஏற்பாடு செய்துள்ள குறித்த நடமாடும் சேவையானது எதிர்வரும் 26ஆம் திகதி திருகோண மலை மாவட்ட செயலகத்திலும் 27ஆம் திகதி மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் நீதி அமைச்சு, பதிவாளர் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், குடிவரவு- குடியகல்வுத் திணைக்களம், புனர் வாழ்வு அதிகார சபை, கிழக்கு மாகாண சபைகளின் கீழ் உள்ள அரச அலுவலகங்கள், சிறைச்சாலைகள் திணைக்களம், நீதி அமைச்சின் கீழ் உள்ள திணைக்களம், தேசிய இன ஐக்கிய அலுவலகம், பொலிஸ், சட்டத் திணைக்களம், கிராமங்களில் உள்ள சமாதானப் பேரவை கலந்து கொள்ளும்.

இச் சேவைகளுக்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலாளர்கள்,பிரதேச செயலாளர்கள், கிராம அதிகாரிகள் பிரதேச பொலிஸ் நிலைய அதிகாரிகளது சேவைகளும் பெற்றுக் கொடுக்கப்படும். இந்நடமாடும் சேவையில் தத்தமது பிரச்சினைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து மீள இலங்கை வந்துள்ளவர்கள் அவர்களது பிறப்பு பதிவுகள், அடையாள அட்டைகள் பெற்றுக் கொள்ளாதவர்கள் இச் சேவைகள் ஊடாக உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் நினைவஞ்சலி நிகழ்வுகள்










தமிழினப் படுகொலையின் 14 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரதான நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நேற்று (18) உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: முல்லைத்தீவு செய்தியாளர்)







தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தினால் யாழ்ப்பாணத்தில் அதன் தலைமை அலுவலகத்தின் முன்பாக நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப்பட்டது. போரில் புதுமாத்தளனில் தனது கணவரைப் பலி கொடுத்த திருமதி தக்ஸாயினி அருள்நேசயோகநாதன் அஞ்சலிச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதைத் தொடந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், பொதுச் செயலாளர் ம.கஜேந்திரன், துணைப் பொதுச் செயலாளர் சண்.தயாளன், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.



யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இறுதி நாள் அஞ்சலி யாழ் .பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தூபியில் இடம்பெற்றது. இதன்போது பொதுச்சுடர் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராமினால் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ச்சியாக ஒரு நிமிட அகவணக்கமும் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. (படங்கள்:- யாழ்.நிருபர்)





முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தையொட்டி நாம் தமிழர் கட்சி சார்பில் அக்கட்சியின் மாநில செயலாளர் தீரன் திருமுருகன் தலைமையில் குழந்தைகள் உட்பட ஏராளமானோர் தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் உருவப்புகைப்படத்தை தெர்மாகோல் மூலம் உருவாக்கப்பட்ட படகில் வைத்து கடலில் விடப்பட்ட பின்னர் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.






முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் (18) உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற நிலையில் மன்னாரிலும் அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் தமிழினப் படுகொலை அஞ்சலி நிகழ்வுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. (மன்னார் நகர் நிருபர்)







கொழும்பு, பொரளை கனத்தை சுற்றுவட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (18) முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சில அமைப்பினரால் இடையூறு விளைவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# வெடிங் என்.ஜே.சஞ்சிகையின் வெடிங் வெண்டோர் விருது விழா



கொழும்பு வெடிங் என்.ஜே.சஞ்சிகையின் வெடிங் வெண்டோர் விருது விழா கொழும்பு மரினோ பீச் ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், சிறப்பு விருந்தினராக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க, பீஜூ இயக்குநர் ரகு இந்திரகுமார்,எச்.ஐ.தொலைக்காட்சி நிறுவனத் தலைவர் தனு சின்னத்தம்பி,கால்நடை வைத்தியர் சமித் அத்தபத்து,சர்வதேச மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அதிகாரி இராமகிருஷ்ணன்,பிரதித் தலைவர் இராமன விஜயமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி நிறுவனம் தமிழ் மொழியில் நடத்திய முதலாவது நிகழ்வு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (கண்டி இரா.அ.இராமன்)

## பாராளுமன்றத்தை பார்வையிட்ட யாழ்ப்பாண மாணவர்கள்





யாழ்ப்பாணத்தில் உள்ள பல பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு பாராளுமன்றத்துக்கு வருகை தந்தனர்.

மாணவர்கள் பாராளுமன்றத்தைப் பார்ப்பதற்கான ஏற்பாடுகளை பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சேவை அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர். பாராளுமன்றத்தின் கலரியிலிருந்து சபா மண்டபத்தில் இடம்பெறும் செற்பாடுகளைப் பார்வையிட மாணவர்களுக்கு வாய்ப்புப் கிடைத்தது. பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு முன்புறமாக மாணவர்கள் புகைப்படத்தையும் எடுத்துக்கொண்டனர்.

இதன்போது பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன, பாராளுமன்ற உறுப்பினர்களான துஷ்மந்த மித்திரபால, ரவூப் ஹக்கீம், இரான் விக்ரமரத்ன, உத்திக பிரேமரத்ன, பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க மற்றும் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து ஆகியோரைச் சந்திப்பதற்கான வாய்ப்பும் இம்மாணவர்களுக்குக் கிடைத்தது.

வடமராட்சி பெண்கள் மத்திய கல்லூரி, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளையார் மகா வித்தியாலயம், வல்வை மகளிர் மகா வித்தியாலயம், நெல்லியடி மகா வித்தியாலயம், பொலிகண்டி இந்துக் கலவன் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் வித்தியாலயம், விக்னேஸ்வரா கல்லூரி, கரவட்டி வேலாயுதம் மகா வித்தியாலயம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ் பெண்கள் பாடசாலை, கொற்றவற்றை பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்காக வருகை தந்திருந்தனர்.

கொவிட் தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த பொது மக்கள் கலரியானது கடந்த செப்டெம்பர் 19ஆம் திகதி முதல் பாடசாலை மாணவர்களுக்காகத் திறக்கப்பட்டதையடுத்து, தீவின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ள பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாராளு மன்றத்தைப் பார்வையிட வருகை தந்துள்ளனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (18.05.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 197.7384 | 209.3946 |
| கனேடியன் டொலர் | 220.7742 | 233.4973 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.9669 | 45.1520 |
| யூரோ | 323.3302 | 340.2989 |
| ஜப்பான் யென் | 2.1696 | 2.2825 |
| சிங்கப்பூர் டொலர் | 221.5428 | 234.1198 |
| ஸ்ரேலிங் பவுன் | 372.6504 | 391.3036 |
| சுவிஸ் பிராங்க் | 330.3977 | 350.5067 |
| ஐ.அ. டொலர் | 299.2144 | 312.3715 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 815.2414 |
| குவைட் | குவைட் தினார் | 1,001.0631 |
| ஓமான் | ஓமான் றியால் | 798.3128 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.3625 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.9545 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.7054 |

## R கலாசார மையத்தின் பிரதிப் பணிப்பாளரை இளைஞர் பாராளுமன்ற பிரதி அமைச்சர் சந்திப்பு



இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் இலங்கைக்கான SAARC கலாசார மையத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி Dr. Bina Gandhi Deori அவர்களை இலங்கை SAARC கலாசார மையத்தில் அண்மையில் சந்தித்தார்.

இதன்போது இளைஞர் பாராளுமன்றம் தொடர்பான அறிமுகம், இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள், இளைஞர்கள் முகம் கொடுக்கும் சவால்கள, இளைஞர்களுக்கான வெளிவிவகார வாய்ப்புகள் மற்றும் கலை, கலாசாரம், சமூக துறையில் இன்றைய இளைஞர்களின் ஈடுபாடுகள் என்பன குறித்து கலந்துரையாடப்பட்டன.

இதன்போது SAARC கலாசர மையத்தின் பிரதிப் பணிப்பாளர் குறிப்பிடுகையில் ,

SAARC அமைப்பைப்பொறுத்தவரையில் SAARC நாடுகளுக்கிடையில் கலை, கலாசார மற்றும் சமூக துறைகளில் வளர்ச்சியையும் அனைத்து நாடுகளது புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் முகமாகவே செயல்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் பலவிதமான செயற்றிட்டங்களை இந்த அமைப்பு செயற்படுத்தி வருவகிறது. எதிர்காலத்திலும் கலை,கலாசாரத்தை ஊக்குவிக்கும் விதமான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவுள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் SAARC நாடுகளின், இளைஞர்களுக்கிடையில் கலை, கலாசாரத்தை மேம்படுத்தும் விதமாக சர்வதேச மாநாடு ஒன்றை இலங்கையில் நடத்துவதற்கான முன்மொழிவு ஒன்றை SAARC பிரதிப் பணிப்பாளர் அவர்களுக்கு சமர்ப்பித்தார் என்பது முக்கியமான விடயமாகும்.





அதிபர் சேவை தரம் - 111 கட்டமைக்கப்பட்ட நேர் முகத்தேர்வுக்கான இலவச வழிகாட்டல் செயலமர்வு கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நுவரெலியா கல்வி வலயத்தின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்திக்குப் பொறுப்பான கல்விப்பணிப்பாளர் எம். கணேஸ்ராஜ் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் வளவாளர்களாக கொட்டகலை அரசினர் ஆசிரிய கலாசாலையின் முதல்வர் லோகேஸ்வரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் ஜெகதீஸ்வரன், கிருபாகரன், இங்கர்சால், கொட்டகலை அரசினர் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர்கள் கலையரசு, அகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள்:தலவாக்கலை நிருபர்)





(மீனோடைக்கட்டு செய்தியாளர், அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் திருகோணமலையிலுள்ள புகழ்பெற்ற சர்வமத ஆலயங்களுக்கும் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் வியாழக்கிழமை(18) ஈடுபட்டார்.

கிழக்கு மாகாணத்துக்கு புதிய ஆளுநராக ஜனாதிபதியினால் தெரிவு செய்யப்பட்ட நிலையில் கடமையை பொறுப்பேற்க முன்னரே நேற்றைய தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்து திருகோணேஸ்வரம் இந்து ஆலயம், பௌத்த விகாரை மற்றும் கிறிஸ்தவ ஆலயம், பள்ளிவாசல் போன்ற மதத் தலங்களுக்கு சென்று விசேட வழிபாட்டில் ஈடுபட்டார்.

மேலும் இன்று வெள்ளிக்கிழமை(19) அவர் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# கிழக்கின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள்



(கிண்ணியா செய்தியாளர்)

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வட கிழக்கு மாகாணங்களில் யுத்த காலத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துதல் மற்றும் கஞ்சி பரிமாறும் நிகழ்வு வியாழக்கிழமை(18) திருகோணமலை நகரின் இறை இரக்க திருத்தலத்தின் முன்பாக இடம்பெற்றது. இதன்போது பலரும் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு மெழுகு தீபமேற்றி அஞ்சலி செலுத்தியதுடன் கஞ்சி பரிமாறும் நிகழ்விலும் ஈடுபட்டனர்.



(மட்டக்களப்பு, கந்தளாய் செய்தியாளர்கள்)

இலங்கையில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக பீடித்திருந்த யுத்தம் கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் எனும் இடத்தில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அந்த இறுதி யுத்தத்தில் இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் உயிரிழந்ததோடு, அவர்களது பெறுமதிவாய்ந்த உடைமைகளும் அழிக்கப்பட்டன.

இவ்வாறு உயிரிழந்த மக்களின் 14ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு மட்டக்களப்பு மன்றேசா தியான வளாகத்தில் வியாழக்கிழமை(18) நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட பாதிக்கப்பட்ட பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் மூவின மக்களும் ஒன்றிணைந்து சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்தினர். இதன்போது உப்புக் கஞ்சி காய்ச்சி சிரட்டைகளில் அனைவரும் பகிர்ந்துண்டனர்.



(கனகராசா சரவணன்)

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் 14ஆவது ஆண்டை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வாகரை மாணிக்கக்கரை கடற்கரையில் வியாழக்கிழமை(18) சுடரேற்றி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



(கிரான் செய்தியாளர்)

"கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்" எனும் தலைப்பில் மட்டக்களப்பு கிரான் பிள்ளையார் ஆலய முன்றலில் முள்ளிவாய்க்கால் இறுதிநாள் அஞ்சலி நிகழ்வு வியாழக்கிழமை(18) நடைபெற்றது.

தமிழரசுக் கட்சி கிரான் கிளை தலைவர் சி.சண்முகநாதன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சுடரேற்றப்பட்டு இறைவணக்கம் செலுத்தப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஆலய குரு, கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.



காத்தான்குடி நகர சபையால் நிர்வகிக்கப்படும் முன்மாதிரி பாலர் பாடசாலையில் 2023ஆம் ஆண்டுக்கான சிறார்களை உள்வாங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (16) பாலர் பாடசாலையில் இடம்பெற்றது. காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி றிப்கா ஷபீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது சிறுவர்கள் மாலையிட்டு வரவேற்கப்பட்டனர். (காத்தான்குடி செய்தியாளர்)



மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷனின் ஏற்பாட்டில் உலகளாவிய இராமகிருஷ்ணமடம், மிஷனின் துணைத் தலைவர் மற்றும் சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ணமடத்தின் தலைவருமான ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தாஜீ மகராஜ் வியாழக்கிழமை (18) மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். அவரை வரவேற்கும் முகமாக கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்தடியிலிருந்து மேளவாத்தியங்கள் முழங்க, பண்பாட்டுப் பேரணி மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜீ மகராஜ் தலைமையில் இராமகிருஷ்ணத் துறவிகள், அடியவர்கள் புடைசூழ, சுவாமிகள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். இப்பேரணியில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள், பல்துறை சார்ந்த விற்பன்னர்கள் கலந்து கொண்டனர். (கல்லடி செய்தியாளர்)



தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, சாய்ந்தமருது அல் - ஹிலால் பாடசாலையில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி செவ்வாய்க்கிழமை(16) முன்னெடுக்கப்பட்டது. பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பாடசாலையை சுத்தம் செய்வதைப் படங்களில் காணலாம். (பொலிவேரியன் செய்தியாளர்)



அம்பாறை மாவட்ட செயலாளரின் ஆலோசனைக்கமைவாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனிபா தலைமை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிரதேச மட்ட நடமாடும் சேவை செவ்வாய்க்கிழமை(16) இடம்பெற்றது. இதன்போது அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் அதிதியாகவும் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், பிரதம கணக்காளர் எஸ்.எல்.ஆதம்பாவா, காணி ஆணையாளர் திருமதி ஏ.எல்.இப்திகா பானு, காணி தலைமை பீட உத்தியோகத்தர் கே.எம்.முஸம்மில், உதவி பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், கணக்காளர் ஐ.எம்.பாரீஸ், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம்.அஸ்லம் மற்றும் பிரதேச செயலக பிரிவுத் தலைவர்களும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

(திராய்க்கேணி செய்தியாளர்)

# அரசியலமைப்பை மாற்றியமைக்க இந்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்

(கனகராசா சரவணன்)

தமிழ் மக்களை இலங்கை தீவில் நிம்மதியாக வாழவைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இந்தியாவுக்கு இருக்கின்றது. இருந்தபோதும் இந்தியாவை பொறுத்தமட்டில் தங்களது நலனை கருத்தில் கொள்ளாது எமது மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் விதமாக அரசியலமைப்பை மாற்றியமைக்க சிங்களப் பேரினவாத அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு நாட்டுக்கு பொருத்தமான சமஷ்டி அடிப்படையிலான அரசியல் யாப்பை கொண்டுவரும் பட்சத்தில் மட்டும் தான் எமது தமிழ் மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வாகரை மாணிக்கக்கரை கடற்கரையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு வியாழக்கிழமை(18) இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஆங்கிலேயர் எமது நாட்டை சிங்களத் தேசத்திடம் கையளித்து 75 வருடங்களாக ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழே தமிழர்களை அடக்கும் முகமாக சிங்கள பேரினவாத அரசு செயற்பட்டு வருகின்றது.

தமிழர்களை பொறுத்தளவில், எம்மீது நடத்தப்பட்ட இனவழிப்புக்காக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். தமிழர்கள் மீது நடத்தப்பட்ட யுத்த குற்ற உள்ளகப்பொறிமுறை ஊடாக நடத்தும் விசாரணை நிறுத்தப்படவேண்டும். அதேபோன்று 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலம் கொண்டுவரப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான 13ஆவது திருத்தச்சட்டம் திருத்தப்படவேண்டும். அத்துடன் இங்கு தமிழர்கள் வாழக்கூடிய சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட்டு தமிழ்த் தேசம், சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நீக்கப்படவேண்டும், காணாமல் போனோருக்கான நீதி கிடைக்க வேண்டும், சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதற்கான பரிகாரம் கிடைக்க வேண்டும் என்றார்.

# காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் மாணவர் தினம்



(நாவிதன்வெளி, மாளிகைக்காடு செய்தியாளர்கள்)

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியின் க.பொ.த. சாதாரண தர மாணவர் தின நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.சுந்தரராஜன் தலைமையில் வியாழக்கிழமை(18) கல்லூரியின் ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளரும் பிரபல வளவாளருமான வை.ஹபிப்புல்லா கலந்து கொண்டிருந்தார்.

மேலும் இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்) வரணியா சந்தரூபன், காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜே.டேவிட், பழைய மாணவர் சங்க செயலாளர் எல்.சுலக்சன் உட்பட பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இம்முறை க.பொ.த(சா/த) பரீட்சை எழுதும் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilanbusiness@gmail.com

# 10வது வருடாந்த Chairman's Awards விருது வழங்கும் நிகழ்வில் சிறந்த திறமையாளர்களை கௌரவித்தது Hayleys







புத்தாக்கங்களில் ஒரு தசாப்தத்தின் சிறப்பைக் கொண்டாடும் Hayleys PLC, 16 வெவ்வேறு வணிகப் பிரிவுகளில் தனது குழுக்களின் சாதனைகள் மற்றும் முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக அதன் 10வது ஆண்டு Chairman's Awards விருது வழங்கும் நிகழ்வை நடத்தியது.

25 திட்டக் குழுக்களைச் சேர்ந்த 205 ஊழியர்கள் ஹேய்லிஸ் குழுமத்தின் மிக உயர்ந்த பாராட்டைப் பெற்றனர். இலங்கைக்கு அந்நிய செலாவணியை கொண்டு வரும் புதிய மதிப்பு கூட்டப்பட்ட ஏற்றுமதி கண்டுபிடிப்புகள், மூலப்பொருட்கள் விநியோக சங்கிலியிலிருந்து ரோபோடிக் செயல்முறை தன்னியக்கமாக்கல் வரை அதிநவீன டிஜிட்டல் மாற்றங்கள் மற்றும் இலங்கை முழுவதும் உள்ள பல்வேறு தொழில்துறை சவால்களுக்கு தனித்துவமான தீர்வுகளை வழங்குவதன் மூலம் புதிய பாதையை தொடங்குதல் இங்கே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

"ஹேய்லிஸின் Chairman's Awards விருது வழங்கும் நிகழ்வு 2012 இல் எங்களின் பல்வகைப்பட்ட வணிகக் குழுமத்தில் வழங்கப்பட்ட புத்தாக்கத்தின் சிறப்பை அங்கீகரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இது நமது பெரு நிறுவன கலாச்சாரத்தின் மிகவும் விரும்பத்தக்க அம்சமாகும்."

"145 வருட வரலாற்றைக் கொண்ட இலங்கையின் ஒரு நிறுவனமாக சவால்களை எதிர்கொள்வது எங்களுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. எங்கள் ஊழியர்கள் சமூகம் எங்களது மிகப்பெரிய சொத்து மற்றும் அவர்கள் எங்கள் வெற்றிக்கு பெரிதும் உதவுகிறார்கள். எங்களது திறமையான ஊழியர்களுக்கு இந்த ஆண்டு விருதுகளை வழங்கும் திட்டங்களின் மூலம் எங்கள் பல்வேறு பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்க முடிந்தது. அவர்களின் நெகிழ்ச்சி மற்றும் விடாமுயற்சியை நாங்கள் பாராட்டுகிறோம்." என ஹேய்லிஸ் நிறுவனத்தின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டித்தகே தெரிவித்தார்.

சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் நிர்வாகம் (ESG), புத்தாக்கம், தரம் மற்றும் லீன் (Lean) மேலாண்மை மற்றும் சிறந்த சேவை ஆகியவற்றிற்காக பல விருதுகள் வழங்கப்பட்டன.



ஐந்து தனித்துவமான தொழில்நுட்ப விருதுகளுடன் ஆறு ஏற்றுமதி சந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட காப்புரிமை பெற்ற கையுறை பாதுகாப்பு தீர்வுகளை அறிமுகப்படுத்தியதற்காக Dipped Products PLC (DPL) சிறந்த ஒட்டுமொத்த வெற்றியாளர் விருதைப் பெற்றது. உலகெங்கிலும் உள்ள கொடுக்கல் வாங்கல் செய்யும் வாடிக்கையாளர் நுண்ணறிவுகளின் ஆதரவுடன், DPL போட்டி மிகுந்த உலகளாவிய நைட்ரைல் கையுறை சந்தையில் அதன் பெயரைப் பிரகாசிக்கச் செய்கிறது. குழுவின் உள்ளக பொறியியல் குழு, குறைந்த இடத்தில் வடிவமைக்கப்பட்ட Fully integrated robot dipping automation' புத்தாக்க பிரிவுக்கும் விருதுகள் வழங்கி அங்கீகரிக்கப்பட்டன.

தலவாக்கலை தேயிலைத் தோட்ட நிறுவனம் (TTE) அதன் இயற்கைக்கு இணக்கமான இறைவரித் திட்டத்திற்காக (eco-friendly zipline) தரம் மற்றும் லீன் (Lean) மேலாண்மை பிரிவில் விருதை வென்றது. எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருட்களின் விலைகள் உயரும்போது புதிய தேயிலை இலைகளை தொழிற்சாலைக்கு கொண்டு செல்வதில் ஏற்பட்ட பிரச்சினைக்குத் தீர்வாக இந்தப் புதிய யோசனை நடைமுறைப்படுத்தப்பட்டது. இம்முயற்சியின் விளைவாக போக்குவரத்துச் செலவுகள் கணிசமாகக் குறைக்கப்பட்டு காற்று வெளியேற்றம் குறைக்கப்பட்டது. மேலும் இந்த வெளியீட்டு பணியிடத்தில் சிறந்த உற்பத்தித்திறனை உறுதிப்படுத்த குழுவிற்கு உதவியுள்ளது.

குழுமத்தின் முன்னணி நுகர்வோர் வர்த்தக நாமமான Singer (Sri Lanka) PLC, தொற்றுநோய் பரவிய காலங்களின்போது வேலை, விளையாட்டு மற்றும் வீட்டிலிருந்து படிப்பு தீர்வுகளுக்கான நுகர்வோர் தேவையின் எழுச்சியைப் பூர்த்தி செய்ததற்காக சேவை சிறப்பு வகை விருதை வென்றது. சிங்கர் வீட்டிலிருந்து பணிபுரியும் கோரிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியது மட்டுமல்லாமல், மிகப்பெரிய மற்றும் அதிகம் பார்க்கப்பட்ட கேமிங் போட்டிகளான சிங்கர் எஸ்போர்ட்ஸ் பிரீமியர் லீக்கின் மூலம் இலங்கையில் உள்ள விளையாட்டு ரசிகர்களின் இதயங்களை வென்றுள்ளது. Hayleys Fabric ஆனது ESG விருதினை வென்றவராக அங்கீகரிக்கப்பட்டது. இது மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள தாவர இனமான Lagenandra Kalugalaensis ஐ மீட்டெடுப்பதற்கான அதன் முயற்சிகளுக்காக, Kalugala வன காப்பகத்தின் சுற்றளவில் ஒரே இடத்தில் மட்டுமே உள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) மற்றும் பேராதனை மற்றும் வடமேல் பல்கலைக்கழகங்களுடனான கூட்டு முயற்சியானது கள ஆய்வு மற்றும் விதை முளைப்பு மூலம் அரிய நீர்வாழ் தாவரத்தை அழிவிலிருந்து பாதுகாக்க உதவுகின்றது.

இந்த நிகழ்வின்போது ஊழியர்கள் நான்கு பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மூலம் மேடையில் தங்கள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பும் கிடைத்தது. பொழுதுபோக்கு அம்சங்களில் ஒரு நேரடி இசைக்குழு, குழு மற்றும் தனிநபர்பாடல் மற்றும் கடல் கழிவுகள் (மீள்சுழற்சி செய்யப்பட்ட நைலோன்) மற்றும் PET போத்தல்கள் (மீள்சுழற்சி செய்யப்பட்ட பொலியஸ்டர்) ஆகியவற்றால் செய்யப்பட்ட ஆடைகளைக் கொண்ட ஹேய்லிஸின் ஃபேப்ரிக் வடிவமைத்த ஃபேஷன் ஷோ ஆகியவையும் அடங்கியமை குறிப்பிடத்தக்கது.

# 'ரியல்டா' உயர் தொழில்நுட்ப மின்கலங்கள் தற்பொழுது உள்நாட்டு சந்தையில்

## மின்கல விற்பனைகளை ஊக்குவிக்க கார்ப்பந்தய வீரர் டிலந்த மாலகமுவ ரியல்டாவுடன் இணைகிறார்




லீடர் குழுமம் இலங்கையின் மின்கல சந்தைக்கு முதன்முறையாக ரியல்டா (Riyelta) உயர் தொழில்நுட்ப மின்கலங்களை அறிமுகப்படுத்தியுள்ளது .

நவீன ஜேர்மன் தொழில்நுட்பத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் இந்த மின்கலங்கள், ஐரோப்பிய உயர்தர சந்தைகளில் மட்டுமே கிடைக்கும் மின்கலங்களின் அம்சங்களை இலங்கை வாகன உரிமையாளர்களுக்கு உள்நாட்டிலேயே மிகவும் மலிவு விலையில் அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குகின்றன.

ரியல்டா மின்கலங்கள், சிங்கர் ஸ்ரீலங்காவின் (Singer Sri Lanka) உத்தரவாதக் காலத்தைக் கொண்டுள்ளது. ஜேர்மன் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட சமீபத்திய சில்வர்செல் (Silver Cell) தொழில்நுட்பம் ரியல்டா மின்கலங்களுக்குள்ள தனித்துவமான அம்சமாகும்.

Silver Cell தொழில்நுட்பமானது நீர் இழப்புகள் மற்றும் அரிப்பை நீக்குகின்ற அதே நேரத்தில், மின்கலங்களின் வெப்பநிலையையும் கட்டுப்படுத்துவதன் மூலம் பொருள் தரத்தை பராமரிக்கிறது. மேலும், ரியல்டாவின் தொழில்நுட்ப வல்லுநர்கள் உருவாக்கியுள்ள கந்தக அமிலமானது அமில எதிர்வினைகளிலிருந்து மின்கலத்தைப் பாதுகாக்கிறது. இத்தகைய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ரியல்டா மின்கலங்களுக்கு உயர்தரத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்குகின்றன.

சர்வதேச கார்ப் பந்தய வீரனான டிலந்த மாலகமுவ உட்பட உலகெங்கிலும் உள்ள பந்தய வீரர்கள் சில்வர்செல் மின்கலங்களைப் பயன்படுத்துகின்றனர்.

ரியல்டாவை உலகளாவிய சந்தையில் நிலைநிறுத்துவதற்கு டிலந்த மாலகமுவ லீடர் குழுமத்துடன் கூட்டுச்சேர்ந்துள்ளார். ஐரோப்பாவில் உள்ள முன்னணி சர்வதேச வாகன பிராண்டுகளுடன் டிலந்தவின் தொடர்புகள் இந்த முயற்சிகளுக்கு உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"எனது தெரிவு எப்போதும் ரியெல்டா உயர் தொழில்நுட்ப மின்கலங்கள். பந்தயத்தில் இருக்கும்போது ஒவ்வொரு விநாடியும் முக்கியமானது. எனது வாகனத்திற்கு சிறந்த மின்கலத்தையே நான் தேர்ந்தெடுப்பேன். ரியல்டா மின்கலங்கள் மிக உயர்ந்த ஜெர்மன் தொழில்நுட்பத்தின் கீழ் தயாரிக்கப்படுகின்றன. சில்வர்செல் மற்றும் ஏஆர் (AR) தரம் வாய்ந்த கந்தக அமிலத்தைக் கொண்டுள்ளன.இதனைத் தவிர, இம் மின்கலங்கள் சிங்கரின் விற்பனைக்கு பிந்தைய சேவை, அதிக செயல்திறன் மற்றும் நீண்ட ஆயுள் போன்ற அம்சங்களைக் கொண்டுள்ளன. "என்னைப் பொறுத்தவரை எனது முதலாவது தெரிவு எப்பொழுதும் ரியால்டா" என்று டிலந்த மாலகமுவ கூறுகிறார்.

ரியெல்டாவுடனான டிலந்த மாலகமுவவின் கூட்டாண்மை இலங்கையில் ரியெல்டா மின்கலங்களுக்கு அதிக கவனத்தையும் ஆர்வத்தையும் கொண்டுவரும் என லீடர் குழுமம் நம்புகின்றது.

லீடர் குழுமம், பல கண்டுபிடிப்புகளுடன் தொழில்துறையில் புரட்சியை ஏற்படுத்தி, மின்கல தொழில்நுட்பத்தில் முன்னணியில் உள்ளது. நவீன சோதனை வசதிகளை உருவாக்க நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்துடன் லீடர் குழுமம் இணைந்துள்ளது. லீடர் குழுமம் விரைவில் மின்சார வாகனங்களுக்கான லித்தியம் அயன் மின்கல உற்பத்தி சந்தையில் நுழையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரியெல்டா உயர் தொழில்நுட்ப மின்கலங்களின் வருகை இலங்கை மின்கல தொழில்நுட்பத்தில் ஒரு புதிய சகாப்தத்தைக் குறிக்கிறது. ரியெல்டா உயர் தொழில்நுட்ப மின்கலங்கள் இப்போது இலங்கையில் வாங்குவதற்கு கிடைக்கின்றன.

# வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரியின் அனுசரணையுடன் குடிநீர்த் திட்டங்கள் ஆரம்பம்

தங்க நகை உலகின் முடிசூடா ராணியாகத் திகழும் வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி கடந்த காலங்களில் முன்னெடுத்த சமூக நலப் பணிகளில் ஒன்றான சுத்தமான குடிநீரை வழங்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் அண்மையில் அதன் 15 மற்றும் 16 ஆவது குடிநீர்த்திட்டம் தலைநகரின் முக்கிய இரண்டு பாடசாலைகளான பம்பலப்பிட்டிய இந்துக் கல்லூரி மற்றும் இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டன.

அதன் பிரகாரம் மேற்படி இரண்டு பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவ மாணவியர்களுக்கு சுத்தமான–சுகாதாரமான குடிநீரைப் பருகும் வாய்ப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. தேசத்தின் உயிர்நாடியாக விளங்கும் மாணவ சந்ததியினரின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் தேவை என்பதை நித்தியகல்யாணி ஜுவலரி எப்பொழுதும் உறுதியாக நம்புகிறது.

"இந்தப் பாடசாலைகளுக்கு குழாய் நீர் இருந்தாலும் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் தேவை இருந்ததால் வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரியின் அனுசரணையுடன் மேற்படி இரண்டு பாடசாலைகளுக்கும் இந்த 02 குடிநீர் திட்டங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளோம். கடந்த காலங்களில் நாம் பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற பொது இடங்கள் பலவற்றில் இவ்வாறான ஏராளமான குடிநீர்த் திட்டங்களை செயற்படுத்திய காரணத்தினால் பொதுமக்களுக்கு இலவசமாக சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு உருவானது." என வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரியின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜெயராஜா தெரிவித்தார்

இக் குடிநீர்த் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் அதன் 17 ஆவது திட்டமாக மஸ்கெலிய பிரதேசத்தில் நல்லதண்ணி மகா வித்தியாலயத்தில் குழாய்க்கிணறுத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. நித்தியகல்யாணி ஜுவலரி நிறுவனத்தினால் வருடாந்தம் இவ்வாறான பல்வேறு சமூகநலத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதோடு உலர் உணவுப் பொருள் விநியோகம், கடற்கரைப் பகுதிகளைச் சுத்தப்படுத்தல், மரம் நாட்டுதல் – பராமரித்தல் மற்றும் இரத்ததான நிகழ்வு ஆகிய திட்டங்கள் அவற்றில் அடங்கும்.

# Golden Awards ஐந்து நட்சத்திர விருதை வென்ற ரொஷெல் மேன்பவர் ஏஜென்சி

இலங்கையின் முன்னணி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமான ரொஷெல் மேன்பவர் ஏஜென்சி நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஏற்பாடு செய்த The Golden Awards - 2023 விருது விழாவில் ஐந்து நட்சத்திர விருதை வென்றுள்ளது. இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய துறையான வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் முன்னேற்றத்துக்கு தனித்துவமான பங்களிப்பை வழங்கிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களைப் பாராட்டிக் கௌரவிக்குமுகமாக மேற்படி விருது விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார அவர்களின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் கோலாகலமாக நடைபெற்ற விருது விழாவில் ரொஷெல் மேன்பவர் ஏஜென்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி நதீஷா தில்ருக்ஷி மேற்படி விருதைப் பெற்றுக்கொண்டார்.

தகுதியான நபரை– தகுதியான தொழிலுக்குப் பொருத்தமான நேரத்தில் தெரிவு செய்தல் – – To Choose the Right Person for the Right Job at the Right Time எனும் தொனிப்பொருளின் படி



செயற்படுகின்ற, தெஹிவளை, ஹில் வீதி, இல 216/1/1 முகவரியில் அமைந்துள்ள 2925 ஆம் பதிவு இலக்கத்துடன் கூடிய ரொஷெல் மேன்பவர் ஏஜென்சி பிரதானமாக இலங்கையர்களுக்கு ஐரோப்பிய நாடான ருமேனியா நாட்டில் தொழில்வாய்ப்புகளை உருவாக்கித் தருவதோடு, ஏற்கெனவே 3,500 இற்கும் மேற்பட்டோர் ரொஷெல் மேன்பவர் ஏஜென்சியூடாக ஹோட்டல், கட்டுமானத்துறை, ஆடைத்தொழில்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

அதிக ஊதியம் மற்றும் பல்வேறு வசதிகளுடன் தொழில்வாய்ப்புகளைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றான ருமேனியாவுக்கு செல்வதற்கு இலங்கையர்கள் அதிகம் விருப்பம் கொண்டுள்ளதோடு அத் தேவையினை கூடுதல் நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதே ரொஷெல் மேன்பவர் ஏஜென்சியின் எதிர்பார்ப்பாகும். எமது முகவர் நிறுவனத்தினூடாக வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு நியாயமானதும் உளப்பூர்வமானதுமான சேவையினை வழங்குவதில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். இந்த வெற்றிக்காக உழைத்த நிறுவனத்தின் பணியாளர்களுக்கும் தொடர்ச்சியாக எம்மீது நம்பிக்கை வைத்த எமது வாடிக்கையாளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்." என திருமதி நதீஷா தில்ருக்ஷி தெரிவித்தார்.

# மக்கள் வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையின் 'வெசாக் பாராயணம் ஓதல்' நிகழ்வு




மக்கள் வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் வெசாக் போயா தினத்தன்று 'கீதாஞ்சலி வெசாக் பாராயணம் ஓதல்' என்ற வெசாக் பக்திப் பாடல் ஓதல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புத்த பிரானின் பிறப்பு, ஞானம் மற்றும் முக்தி ஆகியவற்றை நினைவுகூரும் வகையில் வெசாக் தினத்தில் இப்பாராயணம் நடைபெற்றது. வெசாக் வலயத்தில் அமைந்த யூனியன் பிளேஸ் கிளையில் வெசாக் பாராணய இசைப்பாடல் இடம்பெற்றதுடன் மக்கள் வங்கியின் கொழும்பு தெற்கு பிராந்தியத்தினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மக்கள் வங்கியின் ஏதுகல்புர கிளையைச் சேர்ந்த எரந்தி முனசிங்க பாடல் வரிகளை எழுதியுள்ளார், அதேவேளை, இசையமைப்பையும் பாடலுக்கான பயிற்சியையும் கொழும்பு யசோதரா வித்தியாலயத்தின் இசை ஆசிரியர் ரவ்னித்ரா சப்பரமாது மற்றும் கொழும்பு 02, பாதுகாப்பு சேவைகள் கல்லூரியின் இசை ஆசிரியர் லால் ரூபசிங்க ஆகியோர் மேற்கொண்டனர். மேலும், இக்கிளை வெசாக் ஒளிவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டதுடன், வழிப்போக்கர்களுக்கு கோப்பி மற்றும் பிஸ்கட் தாகசாந்தியும் வழங்கி உபசரிக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பதில் பிரதம நிறைவேற்று அதிகாரிஃபொது முகாமையாளர், கிளைவ் பொன்சேகா, முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி –பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு, கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன, மக்கள் வங்கியின் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைமை அதிகாரி, நாலக விஜயவர்தன, கொழும்பு தெற்கு பிராந்திய முகாமையாளர் மாதவ கனக ஹேவகே மற்றும் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில விஜேமான்ன ஆகியோர் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

# யூனியன் வங்கி வெசாக் பண்டிகையை சூழலுக்கு நட்பான முறையில் கொண்டாடியது



வெசாக் பண்டிகையை முன்னிட்டு யூனியன் வங்கி தமது ஊழியர்களுக்காக ஒளி விளக்குக்கூடு அலங்காரப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வு மே மாதம் 4ஆம் திகதி இடம்பெற்றது. வங்கியின் சகல பிரிவுகளையும் சேர்ந்த ஊழியர்கள் தமது ஆக்கபூர்வமான ஒளி விளக்குக்கூடு அலங்காரங்களை அனுப்பியிருந்தனர். இந்த அலங்காரங்கள் 'மீள்சுழற்சிக்குட்படுத்திய பொருட்களிலிருந்து தயாரிக்கப்படல்' எனும் தொனிப்பொருளுக்கமைய வடிவமைக்கப்பட்டிருந்தன.

இந்த வெசாக் பண்டிகைக் கொண்டாட்டங்களில், சூழலுக்கு நட்பான முறையில் வடிவமைக்கப்பட்டிருந்த ஒளி விளக்குக்கூடுகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. இந்த விளக்குக்கூடுகள் சூழலுக்கு நட்பான அல்லது மீள்சுழற்சிக்குட்படுத்திய பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த முன்னெடுப்புக்கு சகல கிளைகள் மற்றும் பிரிவுகளிலிருந்து சிறந்த பங்கேற்பு பதிவாகியிருந்தது. அணி அங்கத்தவர்களிடையே சிறந்த ஒற்றுமை மற்றும் ஈடுபாட்டை ஊக்குவிப்பதாக இந்த நடவடிக்கை அமைந்திருந்ததுடன் சூழலைப் பாதுகாப்பது தொடர்பில் வங்கியினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாகவும் அமைந்திருந்தது.

இந்த ஒளி விளக்கக்கூடுகளைத் தயாரிப்பதற்கு பல்வேறு மீள்சுழற்சிக்குட்படுத்தப்பட்ட பொருட்களை அணியினர் பயன்படுத்தியிருந் தனர். பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட அலங்காரங்களிலிருந்து, வரகாபொல கிளையைச் சேர்ந்த அணியினர் வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். உள்ளக கணக்குமீளாய்வுப் பிரிவு மற்றும் கண்டி கிளையைச் சேர்ந்த அணியினர் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

படம்: பல்வேறு கிளைகள் மற்றும் பிரிவுகளிலிருந்து அனுப்பப்பட்ட ஒளி விளக்குக்கூட்டு அலங்காரங்களிலிருந்து வெற்றியீட்டிய அலங்காரங்களைக் காணலாம்.

# கிழக்கு ஆளுநர் இனவாதமற்ற நல்லாட்சி மலர உத்வேகத்துடன் செயற்பட வேண்டும்

## கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை வேண்டுகோள்

*(மருதமுனை, சாய்ந்தமருது செய்தியாளர்கள்)*

கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை
නැගෙනහිර මුස්ලිම් මණ්ඩලය
Eastern Muslim Council

கிழக்கு மாகாணத்தில் நல்லிணக்கம், சமத்துவம், சகவாழ்வு ஆகியன கட்டியெழுப்பப்பட்டு, இனவாதமற்ற நல்லாட்சி மலர்வதற்கு புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்வேகத்துடன் செயற்பட வேண்டுமென்று கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

புதிய ஆளுநருக்கு வாழ்த்துத் தெரிவித்து, பேரவையின் சார்பில் அதன் செயலாளர் செயிட் ஆஷிப் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் சகோதர இனத்தைச் சேர்ந்தோரே காலாகாலமாக ஆளுநர்களாக நியமிக்கப்பட்டு வந்துள்ளனர். கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் 2019ஆம் ஆண்டு தமிழ் பேசும் சமூகத்தில் இருந்து முதன்முறையாக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆளுநராக நியமிக்கப்பட்டபோதிலும் தமிழர் தரப்பில் கிளம்பிய எதிர்ப்புக் காரணமாகவும் ஈஸ்டர் குண்டுவெடிப்பின் எதிரொலியாகவும் சில மாதங்களிலேயே அவர் அப்பதவியை இராஜினாமா செய்ய நேரிட்டது.

தற்போது இ.தொ.கா. தலைவரான செந்தில் தொண்டமான் கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கிறார். முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் தமது சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்ற அபிலாஷையும் வேண்டுதலும் முஸ்லிம்கள் மத்தியில் நிறையவே இருந்தபோதிலும், சகோதர இனத்தைச் சேர்ந்த செந்தில் தொண்டமானின் நியமனத்தை மனப்பூர்வமாக வரவேற்றுள்ளனர்.

இந்நிலையில், முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகளை சிதறடித்து விடாமல் கிழக்கில் முஸ்லிம் சமூகத்தை சமத்துவமாக நடத்துவதற்கு புதிய ஆளுநர் முன்னிற்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் சிங்களப் பேரின ஆளுநர்கள் இனவாதமாக செயற்பட்டதனால் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதேவேளை, கிழக்கு மாகாண சபையில் சிங்கள, தமிழ் மேலதிகாரிகளின் பாரபட்சமான செயற்பாடுகளினால் முஸ்லிம்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆற்றல், அனுபவம், தகுதி, சேவை மூப்பு இருந்தும் முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரிகள், உரிய பதவி நிலைகளுக்கு நியமிக்கப்படாமல், திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டிருக்கின்றனர். இனப்பாகுபாடு காரணமாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் காணி, கல்வி, சுகாதாரம், நிர்வாகம் என்று அனைத்துத் துறைகளிலும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவற்றையெல்லாம் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் நிவர்த்தி செய்வார் என்கிற எதிர்பார்ப்பு முஸ்லிம்களிடையே காணப்படுகிறது. இனவாத சிந்தனையற்ற பரம்பரையில் வந்த செந்தில் தொண்டமான், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனவாத அழுத்தங்களுக்கு அடிபணியாமல், முஸ்லிம்களையும் அரவணைத்து அவர்களது உரிமைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் மதிப்பளித்து, சமத்துவமாக நடத்துவதனூடாக கிழக்கின் நல்லாட்சிக்கு வித்திட்ட ஓர் உதாரண புருஷராக வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தி வாழ்த்துகின்றோம் - என கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கு ஆளுநரை நேரில் வாழ்த்திய ஹரீஸ் எம்.பி.



*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் ஊவா மாகாண முன்னாள் அமைச்சருமான செந்தில் தொண்டமானை திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சிநேகபூர்வமாக சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னாள் தலைவரும் அமைச்சருமான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் பற்றியும் மலையக மக்கள் பற்றியும் பேசிக்கொண்ட நாம், இளம் தலைவரான எனது நீண்டகால நண்பர் செந்தில் தொண்டமானை மலையக மக்கள் மட்டுமின்றி, கிழக்கு மாகாண மக்களும் வாழ்த்துவதுடன் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தி கிழக்கு மாகாணம் சிறந்து விளங்க அவர் பயணிக்க வேண்டிய நேரிய பாதைகள் தொடர்பிலும் கலந்துரையாடியதாக ஹரீஸ் எம்.பி. தெரிவித்தார்.

# கிழக்கில் தீர்க்கமான முடிவுகளை எட்ட புதிய ஆளுநர் நியமனம் வழிவகுக்கும்

## மு.கா.வின் பதில் பொருளாளர் யஹியாகான் வாழ்த்து

*(சாய்ந்தமருது செய்தியாளர்)*

கிழக்கு மாகாண புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமானுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பதில் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்காலத்தில் தீர்க்கமான முடிவுகளை எட்டுவதற்கு செந்தில் தொண்டமானின் நியமனம் வழிவகுக்கும் என தான் நம்புவதாகவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில், வெகுவாக பாதிக்கப்பட்ட நாட்டுக்கு அதிக வருமானத்தைப் பெற்றுத் தரும் மலையக சமூகத்தைச் சேர்ந்த செந்தில் தொண்டமான் நிச்சயமாக கிழக்கில் முஸ்லிம் சமூகம் நீண்ட காலமாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் தீர்ப்பார் என்ற நம்பிக்கை முஸ்லிம் சமூகத்துக்கு உள்ளது என்றார்.

## போடியார் புலம்பல்!



**நேற்று மே 18, முள்ளிவாய்க்கால் 14ஆவது ஆண்டு நினைவு வடக்கு, கிழக்கு எல்லா இடங்களிலும் அரசியல் கட்சிகள், பொதுமக்கள் எல்லாப்பேரும் கஞ்சி குடுத்து தீபங்கள ஏற்றி செத்தவங்கள நினைவு கூருனாங்க எலுவா? பகுடி என்னென்டா இனப்படுகொல நாயகன் மகிந்த சொல்லியிருந்தாரு இறந்த உறவுகள தனித்தனியே நினைவுகூரலாம் புலிகளத்தான் நினைவுகூரக்கூடா எண்டார்.. இந்த சிவப்பு சால்வைக்கு தெரியாது புலிகளும் தமிழர்களிட உறவுதாண்டாப்பா. ஏன் நவம்பர் 27இல் அவங்களயும் வடக்கு, கிழக்கில துயிலும் இல்லங்களில தனியாக நினைவு கூருவத இந்தக் கண்றாவி காணல்லையோ!**

# உலக உயர் இரத்த அழுத்த தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வுகள்



*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

உலக சுகாதார நிறுவனத்தினால் 2005ஆம் ஆண்டு மே 7ஆம் திகதியிலிருந்து உலக உயர் இரத்த அழுத்த தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய்த்தடுப்பு பிரிவினால் உப்பற்ற உணவை வலியுறுத்தும் விதத்திலான விழிப்புணர்வு நிகழ்வு புதன்கிழமை(17) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ்.இர்சாத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழிப்புணர்வு அறிவித்தல் நிகழ்வில் பொதுமக்களும் விளையாட்டுக் கழகங்களும் அதிக ஈடுபாட்டுடன் கலந்துகொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய முன்னெடுக்கப்பட்ட இவ்விழிப்புணர்வு நிகழ்வினை பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ. வாஜித் இணைப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணத்துக்கு தமிழ் மகன் ஆளுநராக நியமிக்கப்பட்டமை வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு

## அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் தெரிவிப்பு

*(வெல்லாவெளி செய்தியாளர்)*

தமிழ்ப் பேசும் மக்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்துக்கு தமிழ் மகன் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளமையானது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும் என இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் க.நடராஜா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர் ஒரு தொழிற்சங்கத் தலைவர் என்ற வகையில் இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் சார்பாக அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்மூலம் இலங்கை தாய்நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சமிக்ஞையையும் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார். தமிழ்பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு தமிழ்பேசும் ஆளுநர்களை நியமிக்குமாறு நாம் பொறுப்பு வாய்ந்த தொழிற்சங்கம் என்ற ரீதியில் ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்துள்ளோம். மக்களின் கோரிக்கையும் அதுவாகவே இருந்தது. அந்தக் கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றியமை வரவேற்கத்தக்கது.

வடக்கு மாகாணத்தில் தமிழ் ஆளுநர்கள் பதவி வகித்தபோதும் கிழக்கு மண்ணுக்கு முதன்முறையாக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டமை மகிழ்ச்சி. அதுவும் தொழிலாளர் வர்க்கத்தின் அபிலாஷைகளை புரிந்து கொண்ட ஒரு தொழிற்சங்கவாதியான செந்தில் தொண்டமான் அந்தப் பதவிக்கு வந்திருப்பதானது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக அமைந்துள்ளது. நாட்டில் மாகாண சபைகளில் தற்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லை. எனவே, நிர்வாகம் என்பது ஆளுநர் வசமும் பிரதம செயலாளர்கள் வசமும்தான் உள்ளது.

எனவே, கிழக்கு மாகாணத்தில் சிறந்த சேவையை புதிய ஆளுநர் வழங்குவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. செந்தில் தொண்டமான் மாகாண சபை உறுப்பினராக, அமைச்சராக, பதில் முதலமைச்சராக பதவி வகித்துள்ளார். இவருக்கு மாகாண சபை முறை பற்றி நன்கு தெரியும். ஆகவே, சிறப்பான சேவைகள் இடம்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தென்கிழக்குப் பல்கலையில் வாய்வழி சுகாதாரப் பிரிவு ஆரம்பித்துவைப்பு





*(பாறுக் ஷிஹான், மாளிகைக்காடு செய்தியாளர்)*

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மருத்துவ மையத்தில் வாய்வழி சுகாதாரப் பிரிவு புதன்கிழமை(17) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.ஏ.வாஜித், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், கல்முனை பிராந்திய வாய்ச்சுகாதார நிபுணர் எம்.எச்.எம் சரூக், ஏனைய பிரிவுத் தலைவர்களும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சார்பில் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர், பதிவாளர் மற்றும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர் பேரவையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை இணைந்து பல்வேறு செயற்றிட்டங்கள், கருத்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றன.

இதற்கமைவாக, கடந்த ஆறு மாத காலமாக பேசப்பட்டு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வாய்ச் சுகாதாரப் பிரிவினால் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வாய்ச் சுகாதார மேம்பாட்டுப்பிரிவு திறந்து வைக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் பணிமனையின் பிரிவுகளினால் மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்துக்கான விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்வதென்ற இருதரப்பு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

# திருமலை ஊடகவியலாளர்களுக்கு சமூக ஊடகம் குறித்த செயலமர்வு



*(கிண்ணியா செய்தியாளர்)*

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேஷன் கிண்ணியா அமைப்பினரின் ஒருங்கிணைப்பில் பிரதேச சர்வமத குழுவினருக்கும் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் புராதன மற்றும் சமூக ஊடகம் தொடர்பான செயலமர்வு திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் புதன்கிழமை(17) நடைபெற்றது.

நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானம், இன ஐக்கியம், சகவாழ்வு மற்றும் பன்மைத்துவம் போன்றவற்றைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு செயற்றிட்டங்களையும் பயிற்சிகளையும் தேசிய சமாதானப் பேரவை பிரதேச மட்டங்களில் மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறான செயற்றிட்டங்களில் ஒன்றான மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு (ARC) எனும் இச்செயற்றிட்டத்தில் சர்வமதக் குழுவின் நோக்கு, அதன் இலக்கு, சமூக அங்கீகாரம், உள்ளக ஒற்றுமை, குழுச் செயற்பாடு மற்றும் பெறுபேறு தொடர்பில் விரிவான விளக்கமளிக்கப்பட்டதுடன் பங்குபற்றுனர்களுக்கிடையிலான குழுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வளவாளராக சபீர் பயிற்றுவிப்பாளர்-ஹேஷ்டெக் நிறுவனம், தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.யூ.மதனி உவைஸ், சத்யராஜ் (மொழிபெயர்ப்பாளர்), சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேஷனின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பெண்கள் அமைப்பின் இளைஞர் உறுப்பினர்கள், சமூகமட்ட செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# விசேட தேவையுடையோருக்கான ஆளுமை விருத்தி பயிற்சிநெறி



*(பாறுக் ஷிஹான்)*

விசேட தேவையுடையோருக்கான ஆளுமை விருத்தி பயிற்சி நெறி நிகழ்வு கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது சுயதொழிலை ஊக்குவித்தல் மற்றும் தனியார் துறையில் வேலைக்கு அமர்த்தல் தொடர்பான அனுபவப் பகிர்வு உள்ளிட்டவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இதன்போது பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி வழிகாட்டலில் கல்முனை பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜவ்பர் தலைமையில் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜீவரூபன், திறனாய்வு உத்தியோகத்தர் எம்.வை.எம். றிபாது மற்றும் வளவாளர்களாக மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் திருக்கோவில் பிரதேச செயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.கங்காதரன் மற்றும் றியாஸ்தீன், அம்பாறை மாவட்ட தொழில் நிலையத்தில் கடமை புரிகின்ற புவிதா ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

மேலும் கல்முனை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட விசேட தேவையுடைய பயனாளிகள் கலந்து கொண்டனர்.



**கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கனேடிய தமிழர் பேரவையினால் ஒரு கோடி ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் கையளிக்கப்பட்டன. வைத்தியசாலைப் பணிப்பாளர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கனேடிய தமிழர் பேரவையின் மனிதநேய உதவித் திட்டங்களுக்கான இணைப்பாளர் துரைரெத்தினம் இராசலக்ஷ்மி துசியந்தன் கலந்து கொண்டார். கனேடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கனேடியத் தமிழர் நிதி சேர் நடைமூலம் திரட்டப்பட்ட நிதியின் மூலமே இம்மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

*(பாண்டிருப்பு செய்தியாளர்)*

# கர்நாடகாவின் முதலமைச்சராக சித்தராமையா நாளை பதவியேற்பு

கர்நாடக மாநில முதலமைச்சராக சித்தராமையாவும், துணை முதலமைச்சராக டி.கே.சிவகுமாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் நாளை (20) முதலமைச்சர் மற்றும் துணைமுதலமைச்சர் பதவியேற்பு விழா பெங்களூரில் நடைபெறவுள்ளது.

கர்நாடக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 4 நாட்களாகியும் யார் முதலமைச்சர் என்பதில் சிக்கல் நீடித்து வந்தது. இதனிடையே சித்தராமையா மற்றும் டி.கே. சிவக்குமாரிடையே ஒருமித்த கருத்தை எட்டுவதற்காக காங்கிரஸ் அகில இந்தியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே நடத்திய பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்பட்டநிலையில் கர்நாடகாவின் அடுத்த முதலமைச்சர் யார் என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா முதலமைச்சர் யார் என்பது குறித்து காங்கிரஸ் மேலிடம் அறிவித்த நிலையில், நேற்று ஆளுநரிடம் ஆட்சிகோர உரிமை கோரப்பட்டது. இந்நிலையில், நாளை (20ஆம் திகதி) பதவியேற்பு விழா நடைபெறவுள்ளது.

கர்நாடக சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 37ஆண்டுகளுக்குப் பின்னர் அதிக இடங்களைக் கைப்பற்றி வெற்றி வாகை சூடியது. அதாவது, 223 தொகுதிகளில் போட்டியிட்டு 135 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைப் பிடித்துள்ளது.

கடந்த 13ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை முடிவடைந்த மறுநாளே காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் கூட்டம் பெங்களூரில் நடைபெற்றது. மேலிட பார்வையாளர்கள் சுஷில்குமார் ஷிண்டே, ஜிதேந்திர சிங், தீபக் பபாரியா ஆகியோரின் முன்னிலையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் புதிய முதலமைச்சரைத் தெரிவுசெய்யும் அதிகாரம் காங்கிரஸ் மேலிடத்திற்கு வழங்கி ஒரே வரியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைத்தொடர்ந்து மேலிட பார்வையாளர்கள், ஒவ்வொரு எம்.எல்.ஏயிடமும் தனித்தனியாக கருத்துகளை கேட்டறிந்தனர். யாரை முதலமைச்சராகத் தெரிவு செய்யலாம் என்று அவர்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். அந்தக் கருத்துகளை ஒருங்கிணைத்து அறிக்கை தயாரித்த மேலிட பார்வையாளர்கள் கடந்த 15ஆம் திகதி டில்லி புறப்பட்டுச் சென்றனர்.

அந்த அறிக்கையை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேயிடம் தாக்கல் செய்தனர். பெரும்பான்மை எம்.எல்.ஏக்களின் ஆதரவு சித்தராமையாவுக்கு கிடைத்தது. உடல்நலக்குறைவு காரணமாக ஒரு நாள் தாமதமாக டி.கே.சிவக்குமார் டில்லிக்கு சென்றார். செவ்வாய்க்கிழமை அவர்கள் 2 பேரும் மல்லிகார்ஜுன கார்கேயை அவரது இல்லத்தில் தனித்தனியாக நேரில் சந்தித்துப் பேசினர். டி.கே.சிவக்குமார், தான் கஷ்டப்பட்டு கட்சியைப் பலப்படுத்தி வெற்றிபெற வைத்ததாகவும், அதனால் தனக்கு முதலமைச்சுப் பதவியை வழங்கியே தீர வேண்டுமென்றும் பிடிவாதமாகத் தெரிவித்தார். ஒருவேளை முதலமைச்சுப் பதவி வழங்காவிட்டால் ஆட்சியில் தான் பங்கேற்கப் போவதில்லை என்றும் திட்டவட்டமாகக் கூறிவிட்டதாகத் தகவல் வெளியானது.



### ராகுல்காந்தியுடன் கார்கே சந்திப்பு

தான் 5 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தபோது எந்தத் தவறும் செய்ததில்லை என்றும் களங்கம் இல்லாமல் ஆட்சி நிர்வாகத்தை நடத்தியதாகவும் கட்சியின் வெற்றிக்கு தனது பங்களிப்பு அதிகமாக இருப்பதாகவும் தனக்கு முதலமைச்சர் பதவி வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தியைச் சந்தித்து இருவரும் கூறிய கருத்துகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் ராகுல் காந்தியை டில்லியில் சித்தராமையாவும் டி.கே.சிவக்குமாரும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினர். அப்போது, சித்தராமையாவிடம் பேசிய அவர், தங்களுக்கு முதலமைச்சுப் பதவி வழங்கவிருப்பதாகவும் அனைவரையும் அரவணைத்து சிறப்பான முறையில் ஆட்சி நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

### சித்தராமையாவுக்கு முதலமைச்சுப் பதவி

அதைத்தொடர்ந்து சந்தித்த டி.கே.சிவக்குமாரிடம் ராகுல் காந்தி அடுத்த ஆண்டு நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் அடிப்படையில் முதலமைச்சுப் பதவியை சித்தராமையாவுக்கு வழங்க முடிவு செய்துள்ளதாகவும் தங்களுக்கு துணை முதலமைச்சுப் பதவி வழங்குவதாகவும் எதிர்வரும் காலத்தில் உங்களுக்கு உரிய பதவி வழங்கப்படுமென்றும் உறுதியளித்தார். இதை ஏற்க மறுத்த டி.கே. சிவக்குமார், தனக்கு முதலமைச்சுப் பதவி வழங்கியே தீரவேண்டும் என்று பிடிவாதமாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், ஒருவேளை தனக்கு முதலமைச்சுப் பதவி வழங்காவிட்டால் சித்தராமையாவுக்கும் அந்தப் பதவி வழங்கக்கூடாது என்றும் அதற்குப் பதிலாக மல்லிகார்ஜுன கார்கேவுக்கு முதலமைச்சுப் பதவி வழங்கவேண்டுமென்றும் கூறியதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதை ராகுல் காந்தி ஏற்கவில்லை என்று சொல்லப்படுகிறது.

டி.கே.சிவக்குமாரின் பிடிவாதமான போக்கால் புதிய முதலமைச்சரை நியமிக்க முடியாமல் காங்கிரஸ் கட்சி திணறிக் கொண்டிருந்தநிலையில் தான் ஐந்து நாட் பரபரப்பு ஆலோசனைகளுக்குப் பின்னர் நேற்று காங்கிரஸ் கட்சி சுமுகமாக முதலமைச்சு விவகாரத்தைக் கையாண்டு இழுபறிக்கு முடிவுகட்டியுள்ளது.

இந்நிலையில், டில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கே.சி.வேணுகோபால் மற்றும் ரந்தீப் சுர்ஜேவாலா ஆகியோர் தகுதி வாய்ந்த தலைவர்கள் பலர் இருப்பதால் முதலமைச்சரைத் தெரிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டதாகவும் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தற்போது முடிவு எட்டப்பட்டிருப்பதாகவும் அவர்கள் விளக்கமளித்தனர்.

இதேவேளை, பாராளுமன்றத் தேர்தல் வரை டி.கே.சிவக்குமார் கர்நாடக காங்கிரஸ் கமிட்டித் தலைவராக நீடிப்பார் என்றும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

### நாளை பதவியேற்பு

இதனிடையே, நாளை (20) பிற்பகல் 12.30 மணிக்கு பெங்களூரில் பதவியேற்பு விழா நடைபெறுமென்றும் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இந்நிலையில், கர்நாடகத்தில் புதிய முதலமைச்சர், துணை முதலமைச்சர் பதவியேற்பு விழாவிற்கு எதிர்க்கட்சித் தலைவர்களை அழைக்க காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி, பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி மற்றும் கட்சியின் மூத்த தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டணி கட்சித் தலைவர்களும் பா.ஜ.க. அல்லாத மாநில முதலமைச்சர்களும் பங்கேற்பார்கள் என்றும் தெரிகிறது.

### தமிழக முதலமைச்சருக்கு அழைப்பு

இந்நிலையில், கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பதவியேற்பு விழாவில் பங்கேற்கும்படி காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சித்தராமையா ஆகியோர் முதலமைச்சர் ஸ்டாலினை தொடர்புகொண்டு அழைப்பு விடுத்துள்ளனர். இதையடுத்து, கர்நாடக முதலமைச்சர் பதவியேற்பு விழாவில் தமிழக முதலமைச்சர் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**2 மணிநேரம் 6 வாகனங்களில்...**

# இளவரசர் ஹரி - மேகனை துரத்திய புகைப்படக்காரர்கள்



இளவரசர் ஹரி, அவரது மனைவி மேகன் ஆகியோரை புகைப்படக்காரர்கள் காரில் துரத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானிய அரச குடும்பத்திலிருந்து விலகிய பிரித்தானிய இளவரசர் ஹரி மற்றும் அவரது மனைவி மேகன் ஆகியோர் அமெரிக்காவில் வசித்துவரும் நிலையில், செவ்வாய்க்கிழமையன்று நியூயோர்க் நகரில் இடம்பெற்ற அறக்கட்டளை நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தனர். அவர்களுடன் மேகனின் தாயும் பங்கேற்றிருந்தார். இந்த நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு மூவரும் காரில் திரும்பியுள்ளனர்.

அப்போது அவர்களை புகைப்படம் எடுப்பதற்காக ஏராளமான புகைப்படக்காரர்கள் கார்களில் துரத்தியுள்ளனர்.

சுமார் 2 மணி நேரம் அவர்கள் காரை 6 வாகனங்கள் பின்தொடர்ந்தன. இதனால் வீதியில் அடுத்தடுத்து பல விபத்துகள் இடம்பெற்று பலர் காயமடைந்துள்ளதா இளவரசர் தம்பதியின் செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார் இந்த சம்பவம் பேரழிவை ஏற்படுத்தியிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய இளவரசர் தம்பதியை புகைப்படக்காரர்கள் காரில் துரத்திய சம்பவம் நியூயோர்க்கில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் தொடர்பில் நியூயோர்க் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, 1997 ஆம் ஆண்டு பாரிஸில் புகைப்படக் கலைஞர்களால் துரத்தப்பட்ட கார் விபத்தில் தனது தாயார் இளவரசி டயானா கொல்லப்பட்டார். அவரின் மரணத்திற்கு ஊடகங்களே காரணம் என்று இளவரசர் தெரிவித்துள்ளார்.

---



# தனுஷ்க மீதான மூன்று பாலியல் குற்றச்சாட்டுகள் வாபஸ்

இலங்கை கிரிக்கெட் அணி ஐ.சி.சி டி20 உலகக்கிண்ண தொடரில் ஆடுவதற்காக கடந்த ஒக்டோபரில் அவுஸ்திரேலியாவுக்கு சென்றிருந்த நிலையில் சிட்னி நகரில் உள்ள பெண் ஒருவரை தனது வீட்டில் பாலியல் வன்கொடுமை செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக மீது சுமத்தப்பட்ட நான்கு பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகளில் மூன்று குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டுள்ளன.

அன்றிலிருந்து இதுவரையில் அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தனுஷ்க குணதிலக்கவுக்கு சிட்னி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 4 பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகளில் நேற்று 3 குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக ஆஸி. ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

---

**TATA IPL**

**இன்றைய போட்டி**

போட்டி இல - 66
பஞ்சாப் எதிர் ராஜஸ்தான்
நேரம் - இரவு 7.30
இடம் - தரம்சாலா



# கல்முனை கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் சம்பியனானது பஹ்ரியா



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளரும் கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கல்முனை கோட்டத்தில் உள்ள கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதுடன் 125 போட்டி நிகழ்சிகள் நடைபெற்று வெற்றிபெற்ற வீரர்களுக்கு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசில்கள், பதக்கங்கள்,சான்றிதழ்கள் வழங்கினார்.

புள்ளிகளின் அடிப்படையில் இந்த வருடம் பவளவிழா காணும் கல்முனை கமு/கமு/அல் - பஹ்ரியா மகா வித்தியாலயம் கோட்டத்தின் சம்பியன் பட்டத்தையும் இரண்டாம் இடத்தை கல்முனை கமு/கமு/ அல் - மிஸ்பா மகா வித்தியாலயம் தனதாக்கிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சீகாஸ் வெற்றிக் கிண்ணம் - 2023: சம்பியனானது பிளைங் ஹோர்ஸ் அணி



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சீகாஸ் உயர் கல்வி நிறுவனத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது.

சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பூரண அனுசரணையில் பலம் பொருந்திய 16 அணிகள் மோதிக் கொண்ட சீகாஸ் வெற்றிக்கிண்ணத்துக்கான போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் அணியும் ஹொலி ஹீரோஸ் அணியும் பலப் பரீட்சையில் ஈடுபட்டன. இதில் 8 ஓட்டங்களால் பிளைங் ஹோர்ஸ் அணி வெற்றியீட்டிக்கொண்டது.

முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் தானிஸ் ரஹ்மத்துல்லாஹ்வின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் செய்னுலாப்தீன் நஜீமுதீன் பிரதம அதிதியாகவும் இலங்கைக்கான மாலைதீவு தூதரக முன்னாள் செயலாளரும் சீகாஸ் கல்வி நிறுவனத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளருமான டாக்டர் ஆரிப் ரிஷா கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு வெற்றிக் கேடயத்தை வழங்கி வைத்தனர்.

# UCL கிண்ணத்தை சுவீகரித்த யுனைட்டெட் லயன்ஸ்

(ஜிப்ரி எம். ஹிஸாம்)



திருகோணமலை யுனைட்டெட் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் யுனைட்டெட் கிரிக்கெட் லீக் (யூ.சி.எல்) கிரிக்கெட் தொடரின் 14ஆவது சீஸனுக்கான போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யுனைட்டெட் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வீரர்கள் நான்கு அணிகளாகப் பிரிக்கப்பட்டு அத்தோடு திருகோணமலையில் பிரபலமான கழகங்களிலும் இருந்து தலா இரண்டு வீரர்கள் வீதம் இணைக்கப்பட்டு 14 வீரர்களைக் கொண்ட நான்கு அணிகள் இந்தப் போட்டித் தொடரில் பங்குபற்றின.

யுனைட்டெட் பிளாஸ்டர், யுனைட்டெட் வாரியர்ஸ், யுனைட்டெட் செலஞ்சர்ஸ், யுனைட்டெட் லயன்ஸ் ஆகிய நான்கு அணிகள் பங்கு பற்றிய இத்தொடரில் யுனைட்டெட் லயன்ஸ் - யுனைடெட் வாரியர்ஸ் ஆகிய அணிகள் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தி 21 ஓட்டங்களால் யூ.சி.எல். கிண்ணத்தை யுனைட்டெட் லயன்ஸ் அணியினர் சுவீகரித்துக் கொண்டனர். இப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஆட்டநாயகனாக அஸத் அவர்களும் தொடர் நாயகனாக மயூரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். புகழ்பெற்ற ஐ.பி.எல் தொடரை ஒத்த இவ்வாறானது ஒரு கிரிக்கெட் தொடர் திருகோணமலை மாவட்டத்தில் நடத்தப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

# உலக ரக்பி அங்கத்துவத்திலிருந்து இலங்கை இடைநிறுத்தம்

இலங்கை ரக்பி பேரவையின் ஒழுங்கற்ற நிர்வாகம் மற்றும் அரசியல் தலையீடு என்பன உலக ரக்பி விதிகளை மீறும் நிலையில், உலக ரக்பி பேரவை, இலங்கை ரக்பியை உலக ரக்பி அங்கத்துவத்திலிருந்து இடை நிறுத்தியுள்ளது.

உலக ரக்பி பேரவை மற்றும் ஆசிய ரக்பி, சர்வதேச கூட்டமைப்பு மற்றும் பிராந்திய சங்கம் என்பன இலங்கையில் ரக்பிக்கு குறைந்தபட்ச இடையூறு ஏற்படுவதை உறுதி செய்வதற்காக அனைத்து பங்குதாரர்களுடன் இணைந்து செயற்பட உடன்பட்டுள்ளதாக சர்வதேச ரக்பி பேரவை தெரிவித்துள்ளது.

நிர்வாக சிக்கல்களைத் தீர்க்க சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களுடனும் இணைந்து பணியாற்றுவதே உடனடி முன்னுரிமையாகும். எனவே, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் இலங்கை விளையாட்டு வீரர்கள் மற்றும் அதிகாரிகள் ஆசியாவில் நடைபெறவிருக்கும் போட்டிகளில் பங்கேற்க முடியுமென ரக்பி பேரவை குறிப்பிட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7